விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 21 வெள்ளிக்கிழமை (06.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தேர்தல் ஆணையாளரை விசாரிக்க புலனாய்வுத்துறை கோரிக்கை!

## பொன்சேகா விவகாரம் குறித்து

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜெனரல் சரத் பொன்சேகா, தனது பணிகளுக்காக இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களை பயன்படுத்தியமை சம்பந்தமாக தேர்தல் ஆணையாளரிடம் விசாரணைகளை நடத்தி வாக்குமூலமொன்றை பெற்றுக்கொள்ளும் தேவை இருப்பதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினிக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பில் செயற்பட்டு வந்த முன்னாள் பெண் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழினியை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தமிழினி, பாதுகாப்புச் செயலரின் உத்தரவின் பேரில் குற்ற புலனாய்வுப் பிரிவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இந் நிலையில் நேற்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த காலம் முடிவடைந்துள்ளதால் அவரை விளக்க மறியலில்வைக்குமாறுநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழினி கடந்த வருடம் மே மாதம் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பல்வேறு குற்றச்செயல்கள்சம்பந்தமான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஆசிரியர் இடமாற்ற மேன் முறையீட்டை அதிபரின் ஊடாக மேற்கொள்ள முடியும்

## அடுத்த இடமாற்றப்பட்டியலும் தயார்

(திருகோணமலை)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்டங்களுக்கு இடையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது மேன் முறையீட்டை பாடசாலை அதிபர்கள் ஊடாக மேற்கொள்ள முடியும் என வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

அத்துடன் முல்லைத்தீவுமாவட்டத்தில் 16 பாடசாலைகள் மட்டுமே மீள இயங்கும் நிலையில் ஏனைய பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்படும்போது ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக மற்றொரு பட்டியலை உரிய காலத்தில் வெளியிடுவதற்கு தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மேலும் தகவல் தருகையில், (20ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வினின் செயற்பாட்டுக்கு சுகாதார அமைச்சர் கண்டனம்

(கொழும்பு)

டெங்கு ஒழிப்புக்காக சுகாதார அமைச்சு தேசிய ரீதியிலான வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ள போதிலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்காத அரச அதிகாரிகளை மரத்தில் கட்டிவைத்து தண்டிக்குமாறு ஜனாதிபதியின்செயலணிக்குழு ஆலோசனைவழங்கவில்லை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக விளக்குவதற்கான ஊடகவியலாளர் சந்திப்பின் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் 2 கப்பல்கள் கனடா நோக்கி பயணம்

## ரொஹான் குணரத்ன தகவல் வெளியீடு

(கொழும்பு)

இலங்கை அகதிகளுடனான எம் வீ சன் சீ கப்பலைத் தொடர்ந்து மேலும் இரண்டு அகதிக்கப்பல்கள் கனடாநோக்கிசெல்லவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக பயங்கரவாதம் தொடர்பான நிபுணர் ரொஹான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பான நிபுணர் ரொஹான் குணரத்னவின் தகவல்படி எம் வீ சன் சீ கப்பல் தொடர்பில் கனேடிய அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள தீர்மானத்தின் அடிப்படையில் இந்த இரண்டு கப்பல்களும் தமது பயணம் குறித்து தீர்மானிக்கும் என கூறப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணைந்த பிரபா கணேசன் கட்சியில் இருந்து இடைநிறுத்தம்

## மனோ கணேசன் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு ஆதரவளித்து அரசாங்கத்துடன் இணைந்துகொண்டதன் மூலம் பிரபா கணேசன் எம்.பி எமது கட்சிக்கும் தமிழ் இனத்துக்கும் துரோகம் இழைத்துவிட்டார் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

கடந்த 10 வருடங்களாக நான் முன்னெடுத்துவரும் நேர்மையான நிலைப்பாட்டிற்கு விரோதமாக நடந்துகொண்டதன் மூலம் அவர் என் முதுகில் குத்தியுள்ளார். எமது கட்சியின் அடிப்படைச்சட்டம் கட்சித்தலைவர் என்ற முறையிலே எனக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. குழுவுக்கு ரஷ்யா எதிர்ப்பு

(கொழும்பு)

கொள்கை ரீதியான காரணங்களின் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் இலங்கை தொடர்பான நிபுணர்கள் குழுவை எதிர்ப்பதாக ரஷ்யாவின் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பிரதிநிதியும் அதன் இந்த மாதத்திற்கான தலைவருமான விடாலி சர்கின் தெரிவித்துள்ளார்.

இன்னசிற்றி பிரஸ் செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் மீள்குடியமர்வுக்கு முன் இராணுவ முகாம்களை அமைக்கத்திட்டம்

## பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிப்பு


(கொழும்பு)

வடபகுதியில் இராணுவ முகாம்களை அமைக்கும் பணிகளை சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றும் முன்னர் 127 இராணுவ முகாம்களை அமைக்க பாதுகாப்புச்செயலாளர் தீர்மானித்துள்ளார்.

இதனைத் தவிர காங்கேசன்துறைமுகத்தில் நடவடிக்கைப்பணிகளை சீன நிறுவனம் ஒன்று வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து இலங்கையிலுள்ள எந்த துறைமுகத்தின் நடவடிக்கைப் பணிகளும் சீனாவுக்கு வழங்கப்படவில்லையென துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரியாத் பந்து விக்கிரமமுனி ஊடாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் வடக்குக் (20ஆம் பக்கம் பார்க்க)



## முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகைதந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

ஸ்ரீராம சாஸ்திரி
0775183681, 0775183109

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாம நட்சத்[illegible] கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்துதரப்படும்.

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்**

**K.R.V.INN,**
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் முன்பாக)

*கைரேகை பார்க்கும் நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்*

(2089)


# பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இணையுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு பகிரங்க அழைப்பு விடுக்க ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைத்துவம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அந்த கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய அடுத்த சில தினங்களில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

பொன்சேகாவுடன் கைது செய்யப் பட்ட முன்னாள் இராணுவக் கப்டன் சேனக்க சில்வாவிற்கு நெருக்கமான ஒருவர் அண்மையில் நாடாளுமன்றத்திற்கு சென்று பொன்சேகாவை சந்தித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையின் பிரதிபலனாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத் துவம் மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளது. இந்த சந்திப்புக்கான ஏற்பாடுகளை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மேற்கொண்டிருந்தார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சில மாதங்களுக்கு முன்னர் விடுத்த அழைப்பொன்றுக்கு அமைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத்தலைவர் மங்கள சமரவீர உள்ளிட்ட அந்தக்கட்சியினர் இன்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர். (ச-5)

## தேர்தல் ஆணையாள...

சட்டவிரோதமாக தம்முடன் தங்க வைக்கப்பட்டிருந்த இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களை கைது செய்வதற்காக குழுவொன்று கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சரத் பொன்சேகாவின் வீட்டுக்கு சென்றதாகவும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை தனது பாதுகாப்பிற்கு பயன்படுத்திக் கொள்ள தேர்தல் ஆணையர் அனுமதி வழங்கியதாக பொன்சேகா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் கடிதம் குறித்து எதிர்வரும் நாட்களில் தேர்தல் ஆணையாளரிடம் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்படும் எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (எ-1)

# துப்புரவு செய்யப்படாத காணிகள் நகரசபைக்குச் சொந்தமாகிவிடும்

## சாவகச்சேரி நகரசபைச் செயலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்படாமல்காணப்படும்வெற்றுக் காணிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் நகரசபைக்குச் சொந்தமானதாகப் பொறுப் பேற்கப்படவுள்ளது என்று நகரசபைச் செயலாளர் செல்வி வி .சிவக்கொழுந்து தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரியில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் ஒருசில ஆட்களற்ற காணிகள் இதுவரை துப்புரவு செய்யப்படாமையால் அவை பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இக் காணிகளின் உரிமையாளர்கள் அல்லது பாதுகாவலர்கள் உரிய காணிகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் துப்புரவு செய்தல் வேண்டும். இல்லையேல் நகரசபை அந்தத் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதுடன் காணியைச் சபைக்குச் சொந்தமானதாக எடுத்துக் கொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு

வெளி மாவட்டத்தில் இணைப்பு பெற்ற கிளிநொச்சி வலய நிரந்தர ஆசிரியர்கள் தொடர்பான முக்கிய தகவல்களை திரட்டுவதற்காகவே எதிர்வரும்9 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தங்கள் நிரந்தரப் பாடசாலை அதிபர்களுக்கு அல்லது கோட்டக் கல்வி அதிகாரிக்கு விபரங்களைஉரிய வகையில் பதிவு செய்துவழங்கிஉதவி செய்யுமாறு கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)



22.07.2010 முதல்
ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்



(C-666)
குற்றப்பிரிவு
செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 10 1951



மறைவு 16 08 2010

**அமரர் சின்னப்பொடியன் ஆச்சரியம்**
(முகாமையாளர் - விஜிதா கொன்ஸ்ரக்ஸன்)


எங்கள் பாசமான அப்பாவே
அம்மாவிற்கு ஆருயிர் துணையாக
ஆறுதலாக நீரிருந்தீர்
இரு கண்களாக நாமிருக்க
பாரினிலே தவிக்கவிட்டு
பறந்து சென்றீரப்பா
எம் இமைமூட மறுத்தாலும்
உங்கள் நினைவு
எம் நெஞ்சைவிட்டு அகலாதப்பா

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

மனைவி,
பிள்ளைகள்.

(2081)

# விழிநீர் சொரிகிறோம்



ஊரதீவின் மைந்தனும், கொழும்பு வர்த்தகரும்(குறோசறி), யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலய அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் (ஜே.பி.) அவர்களின் சகோதரருமான

அமரர்
**குமாரசாமி சிவலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(2088)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் கணேசபிள்ளை
**(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)**

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், 134 இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சு.கணேசபிள்ளை 05.08.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பொன்னாலை சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும், ஆவரங்கால் பண்டிதர் சுப்பிரமணியம் அன்னலட்சுமி தம்பதியினரின் மருமகனும்,திலகவதியின் அன்புக்கணவரும், சாரங்கன், பிரசன்னா, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னார் குமாரசாமி, சண்முகரத்தினம், சந்தானகோபாலன், ராஜலச்சுமி, பங்கயவல்லி, ஆகியோரின் உடன் பிறந்த சகோதரரும், சிவராமலிங்கம், முத்துராஜலிங்கம், நடராஜலிங்கம்,திருவாதரன், புனிதவதி, கமலவதி, சௌந்தரியவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 06.08.2010 வெள்ளிக்கிழமை 134,இராசாவின் தோட்டத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(2094)


| | | | |
|---|---|---|---|
| | புதன் சுக்கிரன் சூரியன் | ராகு | சந்திரன் |
| | ராசி | | லக்கினம் |
| | | | செவ்வாய் |
| சனி | கேது | | |



## ஸ்ரீ விநாயகர் ஜோதிட இடம்
### இந்தியாவின் பிரபல ஜோதிடர்
### கார்த்திக் சுவாமிகள்

அன்பர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளியம்மனின் அருள்கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாக பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல், போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்னை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்றுகூடுதல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண்திருஷ்டி இவற்றுடன் எதிர்கால பலாபலன்களை தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.

தொ.பேசி. 0777742747
0777742749

*கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை*

இல,63/1 A,
அங்கலின் கட்டிடம் அருகாமையில்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

No.63/1 A,
NEAR ANGALIN BUILDING,
Grand Bazaar, Jaffna

(2093)

# இன்று ஒரு தகவல்

## ஏற்றுக் கொள்ளுங்கள்

நம்மில் சில பேருக்கு அவர்களுக்கு எதிரில் உள்ளவர்கள் எல்லோரும் எதிரியாக தெரிவார்கள்.

பார்ப்பவை எல்லாம் பகையாகத் தெரியும் குறை எங்கே இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? வெளியில் இல்லை. அவர்களிடம் தான் இருக்கிறது.

ஏற்றுக் கொள்ளும் சுபாவம் இல்லையென்றால் இப்படியான சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும்.

"உன்னைச் சுற்றியிருக்கும் எல்லாமே உனக்கு வெறுப்பைத் தருவதாக நீ உணர்ந்தால், உனக்குள் நீ வெறுப்புடன் இருக்கிறாய் என்பதை அது காட்டுகிறது" என்கிறார் ஓஷோ.

அவர் ஒரு சமயம் கிராமத்துக்குப் போயிருக்கிறார். அங்கே ஒரு ஓய்வு விடுதியில் தங்கியிருந்தாராம். மிகவும் சிறிய கிராமம். அங்கே நாய்கள் அதிகம். இரவென்றால் எல்லா நாய்களும் வந்து மரத்தடியில் கூடிவிடும்.

வாள்வாள் என்று குரைக்க ஆரம்பித்து விடும். அந்த ஓய்வு விடுதியில் மந்திரி ஒருவரும் வந்து தங்கியிருந்தார்.

அவருக்கு அந்த நாய்கள் குரைப்பது பெரிய தொந்தரவாக போய்விட்டது. தூங்க முடியவில்லை. இடையிலேயே எழும்பி இவரிடம் வந்திருக்கிறார். அந்தச் சமயத்தில் இவர் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாராம்.

இவரை எழுப்பிய அவர்,

"சுற்றிலும் இவ்வளவு சப்தங்களுக்கு இடையில் உங்களால் எப்படி நிம்மதியாக தூங்க முடிகிறது?" என்று கேட்டிருக்கிறார்.

இதற்கு இவர் சொன்னார்:

அந்த நாய்கள் உங்களுக்காக கூடவில்லை. உங்களை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக அவை இங்கு வரவில்லை. அவை பத்திரிகைகள் படிப்பதில்லை. அதனால் ஒரு மந்திரி இங்கே வந்து தங்கியிருக்கிறார் என்பது அவைகளுக்குத் தெரியாது. அவைக்கும் உங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அவையெல்லாம் தங்களுடைய வேலையை செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் ஏன் துன்பப்படுகிறீர்கள்?" என்றார்.

"அவையெல்லாம் குரைத்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் நான் எப்படி துன்பப்படாமல் இருக்க முடியும்?" என்றார் அவர்.

இவர் அதற்கு விளக்கம் கொடுத்தார்.

நீங்கள் அவைகள் குரைப்பதை எதிர்த்துப் போராடாதீர்கள். நீங்கள் அவற்றுடன் போராடுகிறீர்கள். அதுதான் பிரச்சினையை உண்டாக்குகிறது. பிரச்சினையை உருவாக்குவது அவற்றின் சத்தம் இல்லை. உங்களுடைய போராட்டம் தான். அந்தச் சத்தம் உங்களைத் தொந்தரவு செய்யவில்லை. அந்த சத்தத்தினால் நீங்களே உங்களை தொந்தரவு செய்கிறீர்கள். நீங்கள் அந்தச் சத்தத்துக்கு எதிராக இருக்கிறீர்கள். நீங்களாகவே உங்களுக்குள் ஒரு நிபந்தனையை ஏற்படுத்திக் கொண்டீர்கள். இந்த நாய்கள் குரைப்பதை நிறுத்தினால் தான் நான் தூங்க முடியும் என்ற நிபந்தனையை நீங்களே உங்களுக்கு விதித்துக் கொண்டீர்கள்.

உங்கள் நிபந்தனையை நாய்கள் கவனிக்கப் போவதில்லை. ஆனால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் நிபந்தனை நிறைவேறினால் தான் தூங்க முடியும் என்று நினைக்கிறீர்கள்.

அதனால் உங்கள் நிபந்தனை தான் உங்களைத் தொந்தரவு செய்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா?

நாய்கள் குரைப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவை சத்தத்தை நிறுத்தினால் தான் தூங்குவேன் என்ற நிபந்தனையை விலக்குங்கள்.

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை நமக்குத் தகுந்தாற் போல் நிர்ப்பந்தப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறோம் பாருங்கள். அது முடியாத காரியம்.

எது எப்படி இருக்குமோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும்.

ஒருத்தர் வந்தார்.

"சேர், எங்கள் வீட்டில் தினமும் பயங்கரமாக குறட்டைச் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இருந்தாலும் அது எனக்குத் தொந்தரவாக தெரியாது. தினமும் கேட்டுப் பழகிப் போய் விட்டது" என்றார்.

"குறட்டை விடுவது யார்? உங்கள் மனைவியா?" என்று கேட்டேன்.

"இல்லை.... நான் தான் அது" என்று சொல்லிவிட்டு அசட்டுத்தனமாக சிரிக்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பூசகர்களுக்கான இருவார வதிவிடப் பயிற்சி நெறி

தமிழக கிராமக் கோவில் பூசாரிகள் பேரவையைச் சேர்ந்த மூன்று பூசகர்கள் இலங்கைப் பூசகர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர்.

முழுமையாக வதிவிடப் பயிற்சியாக அமையவுள்ள இப்பயிற்சி நெறியில் பூசகர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள், ஆலயங்களின் அனுஷ்டான விதிமுறைகள், அர்ச்சனை முறைகள், கிரியைகள் தொடர்பான விளக்கங்கள், முறையான மந்திர உச்சாடனங்கள், பிரார்த்தனை தியானப் பயிற்சிகள், எளியமுறை யோகாசனப் பயிற்சிகள், திருமுறை பஜனைப் பாடல்கள் போன்ற இந்து ஆலயங்களிற் பேணப்படவேண்டிய அடிப்படைக் கிரியை மற்றும் அனுஷ்டானங்கள் தொடர்பான விரிவுரைகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இரண்டுவார கால வதிவிடப் பயிற்சியாக நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குகொள்ள ஏறத்தாழ 100 பூசகர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு, வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் இப்பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளதெனவும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிநெறி தொடர்பான பூரணமான விபரங்கள் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடிதங்கள் கிடைக்காதோரை 011 2552641, 0112552642 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (6-4)

# இராசி பலன்

*06.08.2010*
*(ஆடி 21, வெள்ளிக்கிழமை)*
*ஏகாதசி பிற்பகல் 4.58 மணிவரை*
*மிருகசீரிடம் பின்னிரவு 1.59 மணிவரை*
*இராகுகாலம் 10.34-12.04 மணிவரை*
*சுபநேரம் 6.04-7.34 மணிவரை*

**மேடம்** உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், தெய்வ வழிபாட்டால் மனம் மகிழும் நாள்.

**இடபம்** தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், தொழிலில் முன்னேற்றம் காணப்படும், உறவினர் மூலம் உதவி கிடைக்கலாம், தெய்வ நம்பிக்கை மேலோங்கும்.

**மிதுனம்** பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், அம்பிகை வழிபாட்டில் ஈடுபாடு கொள்வீர்கள், உறவினர்களின் சொற்படி நடந்து கொள்வது நல்லது.

**கடகம்** எடுத்த காரியம் கைகூடும், நீண்டதூர பயணம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிடுவீர்கள், ஆலய வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்ச்சியடையலாம், நண்பர்கள் மூலமாக நல்ல தகவலொன்று வந்து சேரலாம்.

**கன்னி** குடியிருக்கும் வீட்டில் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கும், பெரியோரால் மதிப்பும் பாராட்டும் அதிகரிக்கும் நாள், பயணங்கள் மூலம் நன்மையடைவீர்கள்.

**துலாம்** பயணங்களில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும், விட்டுக் கொடுத்து நடப்பதன் மூலமே தேவையற்ற பகையை தவிர்த்துக் கொள்ளலாம், உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய பணத் தட்டுப்பாடு ஏற்படலாம்.

**விருச்சிகம்** தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும் நாள், நீண்ட கால நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படலாம்.

**தனுசு** தொழிலில் இருந்து வந்த இழுபறிகள் குறையலாம், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், இறைநம்பிக்கை மேலோங்கும், விருந்தினர்கள் வருகை மூலம் மகிழ்ச்சியடைவீர்கள்.

**மகரம்** தடைப்பட்ட காரியங்களை நிறைவேற்ற பாடுபடுவீர்கள், உறவினர்கள் மூலமாக சில வருமானங்களும் வந்து சேரலாம், தெய்வ வழிபாட்டின் மூலம் மகிழ்ச்சியடைவீர்கள்.

**கும்பம்** நினைத்த காரியத்தை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர்களுடனான உறவுகள் சுமாராக இருக்கும், மனதிற்கு இனிய தகவல் ஒன்று வந்து சேரலாம்.

**மீனம்** உறவினர்கள் மூலமாக பாராட்டு கிடைக்கும், பிரயாணங்கள் மகிழ்ச்சியைத் தரும், ஆலய வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றம் உண்டு.

வளவன்

# அடகுநகை ஏலவிற்பனை

யாழ்.பிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில் 30.06.2009 க்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும், மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில் ஏலமிடப்படும் என்பதனை பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (6)


# சந்நிதியானின் மஹோற்சவத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை விசேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வடபிராந்திய சாயி சமிதியில் பஜனை நிகழ்வும் 11ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு *அடியார் பூசையும் அரன் பூசை நேசமும்* எனும் கருப் பொருளில் சைவப்புலவர் எ.அனு சாந்தனின் சொற்பொழிவு நிகழ்வும் இடம்பெறும். (6-35)

# பேசும் படம்



இது எப்படி இருக்கு...

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80-100 | 120 | 110 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | 120 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 55 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 130 | 120 |
| பீற்றூட் | 40 | 70 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 60-80 | 140 | 100 |
| போஞ்சி | 100 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 |

# குருத்துவ வெள்ளிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்

அருட்திரு ம. ஜெறோ செல்வநாயகம்
அதிபர்,
சென். பற்றிக்ஸ் கல்லூரி




குருவாகி வெள்ளி கண்டீர்
வானுயர்ந் தோங்கி நிற்கும் வளமுடைக் காவலூரில்
தேனுடைக் கனிகளோடு தென்றலும் தேடி வரும்
பூ விறைத் தாடுகின்ற புனித சொலஸ்தியார் பங்கில்
தானிறைந் தாளுகின்ற திருமிகு சாம் பொனூரில்

ஆண்டது ஐம்பத்தெட்டில்
பூண்ட நல் மனுவேற்பிள்ளை இராசம்மா
தம்பதி மகனாய் மண்தனில் அவதரித்தார்
கல்லூரி கல்விதனை காடீன்றிக் கற்று
கலை மாணி வாகை சூடி
வந்துதித்தார் கதிரவன் போல்

துறவற மேற்றுமே தூய்மையின் குருமாணவனாய்
எண்பத்தி ஐந்தில் ஏற்றமாய் குருவானீர்
துயரங்கள் துடைத்திட பங்குகள் பல சென்று
ஆற்றி நல் ஆறுதலாய் தேறுதல் பல செய்து
மேய்ப்புப் பணிக்கென ஆண்டவர் வழியினில்
சிறந்த நன் மாணவரை ஆக்கிட சித்தம் கொண்டீர்

அலை வளம் சூழ்ந்து நின்று ஆர்ப்பரித்தாடி
சாதனைகள் சேரவைக்கும் பத்திரிசிய பள்ளிதனில்
மலையென மாண்பு கொண்ட மனநிறைந்தேத்துகின்ற
நிலையினர் பணியாற்றும் நின் புகழ் பள்ளியிலே
எண்பத்தி யொண்பதில் எடுத்தடி கால் பதித்தீர்

தெள்ளிய வேகமாக திரண்டிடும் இனிய உள்ளம்
துள்ளியே சுற்றி யோடி சோலையிலாடி நித்தம்
செல்லமாய் கண்டித்து வெல்லமாய் இன் சொல் டறி
சீரோங்கி புகழ் மேலோங்கி
சம்பத்திரிசிய கொடியோங்கி
ஆற்றிய பணிகள் அளவிடற் பால தன்றோ

இன்று குவலயத்தில் குருவாகி வெள்ளி கண்டீர்
வெள்ளி பொன்னாக வேண்டும்
பொன் வைரமாக வேண்டும்
வைரம் பவளமாக வேண்டும்
பவளம் அமுதமாக வேண்டும்
அமுதம் ஓர் சதாப்தமாக வேண்டும்

முந்தியோர் பெற்ற பேறு முழுவதும்
உம்மைச் சேர
செந்தமிழ் மொழியொத்து
மலர் தூவிட வாழ்த்துகின்றோம்
வாழிய தந்தையே வாழிய முதல்வரே
பல்லாண்டு பல்லாண்டு வாழிய வாழியவே


வெள்ளி விழா நாயகனை
வாழ்த்துகின்றோம்

திருமண வைபவங்கள் மற்றும்
கொண்டாட்டங்களை
இனிதே நிறைவேற்றிட

லொயலர்ஸ்
கல்யாண மண்டபம்
57, பற்றிக்ஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

வெள்ளி விழா நாயகன்
அருட்திரு ஜெறோ செல்வநாயகம்
அவர்களுக்கு ஆசி வேண்டி
வாழ்த்துகின்றோம்


யாழ்ப்பாணம்
உதைபந்தாட்ட மத்தியஸ்தர்
சங்கம்

வெள்ளி விழா நாயகனுக்கு இறையாசி
வேண்டி வாழ்த்துக்கள்

பொபி ஸ்ருடியோ
33, குருசோ் றோட்,
யாழ்ப்பாணம்.

குருத்துவ வெள்ளி விழா காணும் அதிபர் தந்தை அவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்
நவீன முறையில் புகைப்பட அல்பங்களைப் பெற்றுக் கொள்ள
சிறந்த இடம்





THE IMAGING COMPANY BLAX (PVT) LTD
No : 89/2, Wijerathna Mawatha , Mount Lavinia, Srilanka
Tel: +94-(0)11-4342257 4342258, Fax:+94-(0)11-2729988
Jaffna - 0773144952




குருத்துவ வெள்ளி விழா காணும்
அதிபர் தந்தைக்கு இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்

மேய்ப்புப் பணிக்கென இறைவன்
காட்டிய வழியில் சென்று
வெள்ளி விழாக் காணும்
எமது அதிபர் தந்தைக்கு
வாழ்த்துக்கள்

இயக்குநர்
நியூ பிறைட் கல்வி நிறுவனம்
மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.



## வடஇலங்கை தெங்கு உற்பத்தியாளர்களின்

# தென்னந்தோட்டங்களை உரிமையாளர்களிடம் மீளக் கையளிப்பதற்குத் தீர்மானம்

வட இலங்கை தெங்கு பயிர் செய்கையாளர்களின் தென்னந் தோட்டங்களை, உரிமையாளர்களிடம் மீளக்கையளிக்க தீர்மானித்துள்ளதாக வடமாகாண தெங்கு பயிர் செய்கையாளர் சங்கத் தலைவர் கலாநிதி .சு.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

தென்னந்தோட்டங்களில் உள்ள தேவையற்ற மரங்களை அழிப்பதற்கும் தோட்டங்களை இயந்திரம் மூலம் செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதே வேளை; வடமாகாணத்திற்காக மானிய அடிப்படையில் புதிய திட்டங்களை அமுல்படுத்தி தெங்கு பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-51)

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

இணையவழிமூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு -2010 /2011 (வெளிவாரி)

Bachelor of Business Management (Online)Degree Programme 2010/2011

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை -2010

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினூடாக நடத்தப்படும் தமிழ்மொழி மூலமான மூன்று வருட இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்

அல்லது

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய க.பொ.த (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**முக்கிய குறிப்பு:-**

இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றிற்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்:**

விண்ணப்ப் படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட,ரூபா.250 இற்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையை, சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன்,உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்.பல்கலைக்கழகம் , திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளமுடியும்.

விண்ணப்ப் படிவத்தினை www.jfn.ac.lk/bbm எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப் பதிவாளர்,வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ***இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு*** என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 31.08.2010

மேலதிக விபரங்களுக்கு: 0212227519,0212223610,0212223612 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும். (C-808)



## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்

## விசேட ஒன்று கூடல்

ஆலயத்தின் திருப்பணி வேலைகள் எதிர்வரும் 11.08.2010 அன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் இவ்வேலைகளை துரிதப்படுத்தி செய்து முடித்து மகா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற திருப்பணிச்சபையொன்று தெரிவு செய்யப்படவுள்ளது. ஆகவே அம்பாள் ஆலயத்தின் அறங்காவலர் சபை உறுப்பினர்கள்,தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள்,திருவிழா உபயகாரர்கள் உட்பட அனைத்து உபயகாரர்களும்,கிளி.மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும்,கிளி.மாவட்டகுருமார் ஒன்றிய பிரதி நிதிகள்,அடியார்கள் அனைவரும் குறித்த நேரத்தில் ஒன்றுகூடி அம்பாளின் திருப்பணி வேலைகள் நிறைவேற அரும்பணியாற்றிடுவோம்.

காலம்:- 08.08.2010 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- காலை 10 மணி
இடம்:- அம்பாள் ஆலய மண்டபம்

*அறங்காவலர் சபை,*
*இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள்*
*பெருங்கோவில்,*
*இரணைமடு, கிளிநொச்சி.*

(2086)

## University of Jaffna - Sri Lanka
## Faculty of Arts

### CERTIFICATE COURSE IN ENGLISH FOR SCHOOL LEAVERS - ACADEMIC YEAR 2010/2011

Applications are invited from eilgible candidates for registration of the above course to be conducted after working hours on weekdays and on Saturdays at to the ELTC, University of Jaffna. (Those who have already applied need not apply again)

1. **Duration of the Course:** One Academic Year (480 hours)
2. **Admission requirements:**
   Those who have not obtained admission to Universities & possess the following requirements:
   a) The candidate should fulfill the basic requirements for admission to Sri Lankan Universities.
   b) The candidate should have pass in English in the G.C.E O/L either in the old / new syllabus.
3. **Age:** The candidate should not be more than 30 years of age.
4. **Charges for the course:**
   1) Application from Rs. 200/=
   2) Registration fee Rs. 200 /=
   3) Course fee Rs. 10,000/=
5. **Selection** : Selection will be based on a written test.
6. **Closing Date:** 20th August 2010

**Application forms :** Application forms could be obtained from the Assistant Registarar, Examinations And Admission on a payment of Rs. 200/= at the Shroff's counter or at people's Bank -Jaffna University Branch. Duly filled applications should be forwarded on or before 20th August 2010 to the Assitant Registrar, Admission, University of Jaffna, Jaffna. Please write **" Application for Certificate Course in English for School Leavers"** on the to left side of the envelope.

**Registrar,**
**05.08.2010**

## University of Jaffna - Sri Lanka
## Faculty of Arts

### DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING - ACADEMIC YEAR 2010/2011

Applications are invited from eligible candidates for registration of the above course to be conducted after working hours on weekdays and on saturday at the ELTC, University of Jaffna. (Those who have already applied need not apply again)

1. **Duration of the Course** : (4 semesters)
2. **Admission requirements :**
   **a) The candidate should be a non graduate (trained or un trained) English teacher with minimum of three years experience in English Language Teaching at Government / Private Schools at Primary / Secondary levels.**
   b) The candidate should possess minimum good command of English
3. **Age:** The candidate should not be more than 50 years of age.
4. **Charges for the course:**
   1. Application from Rs.200/-
   2. Registration fee Rs.500/-
   3. Course fee Rs.18,200/-
   4. Library / Laboratory fees 400/-
5. **Selection:** Selection will be based on a written aptitude test & an interview.
6. **Closing Date** : 20th August 2010

**Application forms :** Application forms could be obtained from the Assistant Registrar, Examinations and Admissions on a payment of Rs. 200/- at the shroff's counter or at people's Bank - Jaffna University Branch. Duly filled applications should be forwarded on or before 20 th August 2010 to the Assistant Registrar, Admissions, University of Jaffna, Jaffna. please write **"Application for Diploma in English Language Teaching"** on the top Left side of the envelope.

**Registrar,**
**05.08.2010**

(C-806)






இலங்கை வங்கியின் 71 ஆவது பிறந்த நாள் நிகழ்வு வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளையினரால் அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கிளையின் முகாமையாளர் பே. பிரான்சிஸ் மங்கல விளக்கேற்றுவதையும் வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஆனந்தநடேசன் வாழ்வகப் பொறுப்பாளர் எஸ்.ரவீந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும் அருகில் மதகுருமார்கள், வங்கி மேலதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# கண்பார்வையற்ற இளைஞரினால் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத்தாக்கல்

(கொழும்பு)

மேல் நீதிமன்றத்தினால் சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டபோதும், தான் தொடர்ந்தும் அகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கண்பார்வையற்ற இளைஞர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றைத்தாக்கல் செய்துள்ளார்.

அம்மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது, தனது குடும்பத்துடன் செட்டிக்குள நலன்புரி நிலையத்திற்கு வந்து, பின் ஜீவநகர் நலன்புரி நிலையத்திற்கு அனுப்பப்பட்டதாகவும், அங்கு ; தன்னை மட்டும் தடுத்து வைத்துவிட்டு குடும்பத்தவர்களைச் செல்ல அனுமதித்ததாகவும், தான் குற்றத் தண்டனை வழங்கப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கைதிகள் பரிமாற்றத்தின் போது தான் விடுவிக்கப்பட்டதாகவும், பிழையான காரணத்தைக் காட்டி அதிகாரிகள் தன்னை கைது செய்துள்ளதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இம் மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரரான இந்த இளைஞர் கடந்த மாதம் ஜுலை 25 ஆம் திகதி ஓமந்தை மத்திய கல்லூரி முகாமில் இருந்தே பயங்கரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று சிரேஷ்ட அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

மனுதாரரான ஸ்ரீசெல்வன் அன்டன் ஜுட்ஸ் பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவின் பிரகாரம் கைதுசெய்யப்பட்டதாகவும் தற்போது அவர் பூசா தடுப்புக் காவல் முகாமில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மனு நீதியரசர்களான ஷிரானி ஏ.பண்டாரநாயக்க, கே.ஸ்ரீபவன் மற்றும் பி.ஏ. ரத்னாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

கடந்த மாதம் ஜுலை 19 ஆம் திகதி இந்த மனு நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது, சிரேஷ்ட அரச சட்டவாதி கூறுகையில், மனுதாரர் அரசாங்கத்தின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் அகதிகள் நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கின்றார் என்றும் தெரிவித்திருந்தார். மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மேல் நீதிமன்றத்தினால் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் அவரை எவ்வாறு குற்றத் தீர்ப்பு பெற்றவராக வைத்திருக்க முடியும் என்று அவ் வேளையில் பிரதம நீதியரசர் கேள்வி எழுப்பியிருந்தார்.

மனுதாரர் அரச பாதுகாப்பை விரும்பவில்லை என்றால் , அவரை ஏன் நலன்புரி நிலையத்தில் வைத்திருக்க வேண்டும் என்றும் கேட்ட பிரதம நீதியரசர் மனுதாரர் நலன்புரி நிலையத்திலிருந்து வெளியேற விரும்பினால் அனுமதி வழங்கலாமே என்றும் பிரதம நீதியரசர் அவ் வேளையில் அரச சட்டவாதியிடம் வினாவினார்.

இக்கட்டத்தில் மனுதாரர் கைது செய்யப்பட்டிருக்கிறாரா அல்லது சரணடைந்தாரா என்பது பற்றி உரிய அதிகாரிகளிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற கால அவகாசம் தரும்படி அரச சட்டவாதி கேட்டிருந்தார். (6)

# கணனிப் பயிற்சி

(வல்வெட்டித்துறை)

வடமராட்சி வடக்குப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு கணனிப் பயிற்சி நெறியினை கடந்த 3ஆம் திகதி செயலக மண்டபத்தில் வைத்து பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இப்பயிற்சி வகுப்பானது ஒருமாத கால தவணை அடிப்படையில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு 60 க்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (2)

# மாவட்டமட்ட சிறுவர் பாடல் போட்டியில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியினால் நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட சிறுவர்களுக்கான பாடல் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் கலைப் பிரிவு மாணவி செல்வி. சாமிலி ஸ்ரீதரன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (6)

# வடக்கு -கிழக்கு விவசாயிகளுக்கு பெரும்போக பயிர்செய்கைக்கு கடனுதவி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு விவசாயிகளுக்காக எதிர்வரும் பெரும்போக பயிர்ச்செய்கைக்கு குறுகிய காலக் கடனாக 80 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இந்தக் கடனுக்காக 14சதவீத வட்டி அறவிடப்படவுள்ளபோதிலும் அதில் 8 சதவீதத்தை மட்டுமே விவசாயிகள் செலுத்த வேண்டியிருக்கும்.

மிகுதி ஆறு சதவீதத்தை அரசாங்கமே செலுத்தும். இவ்வாறான குறைந்த வட்டியில் 20 ஆயிரம் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடனை திருப்பிச் செலுத்தும் மேலும் சலுகைகள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நெல், பயறு சோளம்,சோயா மற்றும் நிலக் கடலை ஆகிய பயிர்களுக்காக கிழக்கிலுள்ள விவசாயிகளுக்கும் வெங்காயம், வாழை, மரவள்ளி ஆகிய காய்கறி பயிர்களுக்காக வடக்கில் உள்ள விவசாயிகளுக்கும் இந்தக் கடன் வழங்கப்படும் என கூறப்படுகிறது. (6-2)

# வாக்காளர் இடாப்புத் திருத்தம்


(கொழும்புத்துறை)

''சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டில் கடமைகளைச் செய்து உரிமைகளைக் காப்போம்'' என்ற தொனிப்பொருளில் வாக்காளர் இடாப்புத்திருத்தம் -2010 தொடர்பாக கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருவதுடன் பிரசாரங்களையும் மேற் கொண்டு வருகின்றனர்.

தற்போது வழங்கப்பட்டு வரும் வாக்காளர் விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெறாதோர் தங்கள் பிரதேச கிராம உத்தியோகத்தர் அல்லது கணக்கெடுப்பு உத்தியோகத்தரிடம் சென்று அதனைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண் டும் எனவும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

வாக்காளர் இடாப்புத் திருத்தம் தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படின் 0212222571 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகின்றது. (6-51)







பலாலி வீதியில் அமைந்துள்ள Childeren's World Centre For child Development இன் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் அணிநடை, உடற்பயிற்சி, குழு விளையாட்டு மற்றும் வினோத உடை போட்டிகளையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் மாணவர் ஒருவருக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில்காணலாம்.

# வடக்கு மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் காலம் கடத்தாது விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே பவ்ரல் அமைப்பின் நிலைப்பாடாகும். எனினும் இடம்பெயர்ந்துள்ள மக்கள் வாக்களிப்பதற் கான ஏற்பாடுகள் முறையாக நடைபெற வேண்டும் என்பதும் முக்கியமாகும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடைபெறும் என்று அரசாங்க அமைச்சர்கள் தெரிவித்து வருகின்றமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது யுத்தம் முடிந்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் மாகாண சபை தேர்தல் நடைபெறவேண்டும் என்பது அவசியமான விடயமாகும். ஏனைய மாவட்டங்களில் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட்டு, அங்கு மாகாண சபைகள் இயங்குகின்ற நிலையில், வடக்கு மாகாண மக்களுக்கும் அந்த உரிமை வழங்கப்பட வேண்டும்.

எனவே காலம் கடத்தாது வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஆனால் இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் அனைவரும் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் வடக்கில் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டால் அது பொருத்தமாக அமையும்.

அதற்காக காலத்தை கடத்திக் கொண்டிருக்க முடியாது. எனவே இடம்பெயர்ந்துள்ள மக்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்துவிட்டு தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்தார்.

(6-2)

# சவுதி அரேபிய சிறைகளில் வாடும் 350 இலங்கைப் பணிப்பெண்கள்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த சுமார் 350 பணிப்பெண்கள் சவுதி அரேபியாவின் சிறைச்சாலைகளில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் நாடு திரும்பும் பொருட்டு, இலங்கை அதிகாரிகளின் உதவியை எதிர்பார்த்திருப்பதாக செய்தி வெளியாகி யுள்ளது.

அவர்கள் பெரும்பாலும் தொழில் வழங்குனர்களால் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையிலும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட நிலையிலும் வீடுகளிலிருந்து தப்பி வந்தவர்கள் என கூறப்படுகிறது.

சவுதிஅரேபியாவில் ஒலாகா பாதுகாப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப்பெண்கள் இந்தத் தகவலை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பால் விசாரணை நடத்துகின்ற இலங்கைத் தூதரகம் ஓரிரு நாட்களின் பின்னர் அவர்களை முகாம்களுக்கு அனுப்பி வைத்து விடுவதாக கூறப்படுகிறது.

இதன் பின்னர் முகாமின் பொலிஸார் விசாரணைக்கு அழைக்கும் வரை அவர்கள் முகாமிலேயே தடுத்து வைக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாம் உணவு, நீர், வேதனம் என்பன வழங்கப்படாமல் துன்புறுத்தப்படுவதாகவும் சில சந்தர்ப்பங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் கூட பலவந்தமாக பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாகவும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் முறையிட்டுள்ளனர்.

வீடுகளிலிருந்து தப்பி வந்த பின்னர் அவர்கள் மீது திருட்டுக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(6-4)


80 ஆண்டு பூர்த்தியில்...

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
SINCE 1930



A dance for Virakesari
Rama Vaidyanathan

1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தனது முதல் பதிப்பை வெளியிட்ட வீரகேசரி அன்று முதல் இன்றுவரை தமிழ்பேசும் மக்களிடையே நம்பிக்கை வென்ற நடுவுநிலையான மிகுந்த புகழ்பெற்ற பத்திரிகையாகத் திகழ்கின்றது.

எமது சேவையில் 80ஆம் வருட மைல்கல்லை எட்டும் இந்நாளில் தேசிய தமிழ் பத்திரிகைகளில் முதன்மையான - முதல்தரம் வாய்ந்த தமிழ் பத்திரிகையாக வீரகேசரி முத்திரை பதித்துள்ளது.


மிகுந்த மகிழ்ச்சி நிறைந்த இத் தருணத்தில் கடந்த 80 ஆண்டுகளாக எமக்கு ஊக்கமளித்த எமது மதிப்பிற்குரிய வாசகர்கள், விளம்பரதாரர்கள், பத்திரிகை விற்பனை முகவர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த 80 வருட பயணத்தில் எம்மோடு இணைந்திருந்து இலங்கையின் முதன்மை தமிழ் பத்திரிகையாக எம்மை பிரபல்யப் படுத்தியவர்கள் நீங்களே!

உணர்வுகளுக்கு மதிப்பளித்து எமது பாரம்பரியத்தை தொடர்ந்தும் பேணி மேலும் பல்லாண்டுகள் உங்களுக்காக எமது சேவைகளை முன்னெடுக்க முயற்சிப்போம்.

தலைவர்
இயக்குநர் சபை
முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள்
எக்ஸ்பிரஸ் நியுஸ் பேப்பர்ஸ்
(சிலோன்)(பிரைவெட்)லிமிடெட்.

ANNIVERSARY
VIRAKESARI வீரகேசரி 80 YEARS
SINCE 1930

(C-807)



இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையுரையாற்றுவதையும் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளரும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவருமான நிமால் சந்திர அமரசிங்க, பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றுவதையும், யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கே.கணேஷுக்கு அமைச்சர் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டமானாறு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கலைவாணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிலையத்தலைவர் சி. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ. சிறிரங்கேஸ்வரன் கலந்துசிறப்பிக்க வுள்ளார். (4)

## முன்பள்ளி கலை விழா

(அல்வாய்)

உடுப்பிட்டி கொத்தணி முன்பள்ளிகளின் கலைவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி கலை அரங்கில் முன்பள்ளி கொத்தணி தலைவர் செல்வி இ.சாரதா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், இவரது பாரியாரான திருமதி செல்வராணி தில்லைநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக, உடுப்பிட்டி அ.மி அதிபர் ச.அமிர்தலிங்கம், யாழ். சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.எஸ். ஏ.ஜபர்ரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-19)

## பரிசளிப்பு விழா

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பகுதிக்குட்பட்ட பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெற்றியீட்டியவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நகராட்சி மன்றம் கேட்டுக்கொள்கின்றது. (6)

## மலர்வெளியீடும் நிறுவுனர் தினமும்

(மருதங்கேணி)

புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் மலர் வெளியீடும் நிறுவுநர் தினமும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் வித்தியாலய கொழும்பு கிளை தலைவர் சே.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவு பேருரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா ஆற்றுவார்.

சிறப்புமலரினை இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி முதற்பிரதியை வழங்க யூ.கே.ஈ. நிறுவன அதிபர் என்.சிவகுமார் பெற்றுக் கொள்வார். (6-35)

### கதிரிப்பாய் ஊடான

# அச்சுவேலி-தொண்டைமானாறு வீதியை திறப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தேவஸ்தான பெருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேவஸ்தான பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஆரம்ப ஏற்பாடுகளைப் பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் காலை தேவஸ்தானத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் சிவசண்முக ஐயர் மற்றும் ஆதீனகர்த்தா சபை உறுப்பினர்கள் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர். இம் மாதம் பத்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள பெருவிழாவானது எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்நிலையில் தேவஸ்தான நிர்வாகத்தினருடனும் வல்வெட்டித்துறை நகரசபை நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடிய அமைச்சர் பெருவிழா ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கினார்.

குறிப்பாக சுற்றாடலில் தூய்மையினைப் பேணுதல், தேவஸ்தான கேணிகளை புனரமைத்தல், அடியார்களின் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளல் தொடர்பில் உரிய பணிப்புரைகளை வழங்கிய அமைச்சர் பக்தர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டார்

இதேவேளை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 15 நாட்கள் வரை நடைபெறவுள்ளது. இந்நிலையில் உற்சவத்தில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ஆலய நிர்வாகத்தினரும் அப்பகுதி சமய பெரியோர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப் பக்தர்களின் வசதி கருதி கதிரிப்பாய் ஊடான அச்சுவேலி தொண்டைமானாறு வீதியை திறப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பாக பாதுகாப்பு தரப்பினருடன் தொடர்புகொண்ட அமைச்சர் பக்தர்களின் வசதி கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ளு மாறும் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# முகாம்களிலுள்ள மக்கள் தொற்றுநோய்களால் பாதிப்பு

(திருநெல்வேலி)

தற்போது நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக கொடிகாமம் இராமாவில், மணற்காடு முகாம்களில் உள்ள மக்களின் கண் நோய், அம்மைநோய் போன்ற நோய்களால் அதிகமாக பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விரைவாகப் பரவிவரும் இந்நோய் தாக்கத்தால் இம் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வடமராட்சி கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, சுண்டிக்குளம் , உடுத்துறை, தாளையடி, வத்திராயன், மருதங்கேணி, மாமுனை, செம்பியன்பற்று, குடாரப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் இவர்கள் இங்கு தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (6-51)

## போசாக்குணவு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இராமகிருஷ்ணமிஷனின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு போசாக்குணவு மற்றும் கல்வி உபகரணங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் 96 மாணவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு உணவு மற்றும் கல்வி உபகரணங்களும் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு மாணிப்பாய் வீதியிலுள்ள சமிதி மண்டபத்தில் இராப்போசனமும் வழங்கப்படவுள்ளதாக சமிதியின் செயலாளர் சி. சிவயோகன் அறிவித்துள்ளார். (4)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இ.எஸ் பேரம்பலம் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 13 ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலைகளுக்கிடையிலான 44 ஆவது விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் பாலர் கல்விக் கழக தலைவர் எஸ்.பி காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக இ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் இ.எஸ்.பி நாகரத்தினம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் ,கௌரவ விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப் பாளர் க.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் 'சனாதன தர்மம்' என்னும் விடயம் பற்றி இளைப்பாறிய அஞ்சல் பயிற்சி கல்லூரி அதிபர் ரி.ரி. சண்முகநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

✠✠✠

(மருதங்கேணி)

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-35)




## மஹோற்சவம்

(கொழும்புத்துறை)

பண்டத்தரிப்பு பணிப்புலம் திருவருள் மிகு முத்துமாரியம்மாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 29 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகிறது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் 11 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (6-51)

## பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை றொசாறியன் சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நிலைய மண்டபத்தில் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயப் பங்குத் தந்தை அன்ரன் மத்தாயஸ் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் அதிதியாக கியூடெக் நிறுவனத்தின் வலுவூட்டல் இணைப்பாளர் எஸ்.யோசப்பாலா கலந்துகொள்வார். நிகழ்வில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (6-51)

## வீடுகள் கையளிப்பு

(மருதங்கேணி)

கற்கோவளம் புனித நகர் பகுதியில் லயன்ஸ் கழகத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட 81 வீடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை லயன்ஸ் கழக ஆளுநரால் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (6-35)

# ஈழத்துத் தமிழ்க் கவிதைகளின் தனித்துவம்; சேரனின் கவிதைகளை முன்வைத்து ஓர் ஆய்வு

3

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

'ஒரே நேரத்தில் மரண தொலைவு முடிவற்ற இன்பம் முடிவற்ற துயரம் எல்லாவற்றுக்கும் நெருக்கமாக இருந்தோம்' என்றும் இன்னும் இன்னும் பாடுகிறார்.




ஆரம்பகாலக் காதல் கவிதைகளை விட பிரசவக் கோடுகளைத் தடவும் விரல்களில் இருந்து எழுந்து வரும் கவிதைகள்' தீவிரம் உடையதாக விளங்குவதைக் காணலாம்.

'மதுவில் நனைந்த ஆடையைக் கழற்ற தன்னிடம் தேவையா உனக்கு? சதுக்கத்தின் நடுவில் சுழற்றிவீசு தங்கக் காசால் உன்னை மறைப்பேன்.' என்னும் சேரனின் குரல் தீவிர காமத்தின் குரலாகிவிடுகிறது.

***சேரனின் கவிதைகளில் புகலிட அனுபவங்கள்***

1980களுக்கு பிறகு கிளைத்த கவிமரபின் அடுத்த கட்டமான புலம்பெயர் கவிதைகளிலும் சேரனின் கவிதைகள் இணைந்து கொள்கின்றன.

அங்கு அவரது குரல் நிலமற்ற சோகத்திலும், நிலத்தின் நினைவு திரும்பிய மதுக் கிண்ணத் தோடும், நிறப் பாகுபாட்டின் அவலத் தோடும் ஒலிப்பதைக் காணலாம்.

'..........ஊர்/நிலையற்றுத் தவித்து என்னைத்தூக்கி வெளியே வீசியது.' என்று தான் புலம்பெயர்க்கப்பட்டதை கூறி ஒளி வராத பனிப்பாலையில் தான் தஞ்சமாகியதைக் கூறுகிறார்.


அங்கு 'மரங்களற்ற வெள்ளைப் பனிக் காட்டில் தனித்தேன்' என்றும் 'இப்போதே நான் தனித்த அசோகமரம்' என்றும், 'பனிப்பாறைத் தனித்தீவுக் குளிர்நாளில் எனக்கென்ன எதிர்காலம்?' என்று புகலிடத் தனிமையிலும் விரக்தியிலும் கவிதை ஒலிப்பதைக் காண்கிறோம்.. காரணமற்ற நியாயமற்ற மரணங்கள் கண்டு 'சாம்பல்பூத்த தெருக்களில் இருந்து எழுந்து வருக' என்று அறை கூவிய குரல் இப்போது.

'கேட்டுக் கவலையுற்றுத் துன்புறுவோம். பின்னர் வழமைப்படி, என்புருக்கும் பனிக் குளிரில் இறங்கிப்போய் விடுவோம் வேலைக்கு பொழுதில்லை அழுவதற்கும்' என்று ஆகி விடுவதையும் உணர்த்துகிறார். இவ்வாறு சேரனின் கவிதைகள் பல தளங்களிலும், தடங்களிலும் ஓயாது இயங்குவதைக் காணலாம். ஒவ்வொன்றின் வெளிப்பாட்டிலும் வடிவ நேர்த்தியும், புதுமையும், மொழியாற்றலின் வீச்சும், படிமத்தின் ஆழமும் மிக காலபூர்வமாக வெளிப்படுகின்றன. இவற்றைத் தீவிரமாக மதிப்பிட இச்சிறு கட்டுரை இடமளிக்காது காட்டப்பட்ட உதாரணங்கள் சேரனின் கலாபூர்வத்தையும் அழகியல் பெறுமானத்தையும் ஓர்ளவிற்கேனும் எடுத்தியம்பவல்லன.

4. முடிவுரை

சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து இன்று மரங்களற்ற பனிக்காடு வரைக்கும் விசாலித்து பயணம் செய்யும் சேரனின் கவிதைகள் ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபில் மாத்திரமன்றி தமிழ்க்கவிதை மரபிலும் தனியிடத்ததைப் பெறுவன. சேரனே ஒரு கவிதையில் சொல்வது போல்,

'எனது கவிதை சிக்கலற்றது
ஆழமான உணர்ச்சிச் சுழிப்புகளில்
அது தன்னுடைய ஆழத்தை இழக்கவில்லை' என்பது உண்மையானது ஆகும். சேரனில் கருத்து மற்றும் கவித்துவ தொடர்ச்சியை, வளர்ச்சியைக் காண முடிகின்றது.



'என்னுடைய முழுக்கவிதைகளையும் எப்போதாவது எழுதி முடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை'

என்று சேரன் சொல்கிறார். ஆனால் அவர் இதுவரை எழுதிய கவிதைகளே அவரைப் பெரும் கவிஞனாய் வாழவைக்கும் தகுதி கொண்டவை.

**த.அஜந்தகுமாரி**

ஈழத்துத் தமிழ்க் கவிதையை தனித்துவப் படுத்திய முன்னோடிக் கவிஞர்களில் சேரனும் ஒருவர் என்பது 'உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.' (முற்றும்)





ஜேர்மன் நாட்டிலிருந்து வருகை தந்த அல்வினஸ் அமலதாஸ் என்பவர் யாழ். ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தைச் சேர்ந்த 42 மாணவர்களுக்கு சப்பாத்துக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந் நிகழ்வில் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சி.சித்தரவடிவேல் உரையறுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் க.விஜயதேவன், அல்வினஸ் அமலதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கோட்டக்கல்வி அதிகாரி மாணவர் ஒருவருக்கு சப்பாத்து வழங்குவதையும் அருகில் வித்தியால ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## கிழக்கு மாகாணத்திலுள்ள விகாரைகளை புனரமைக்கக் கோரி உண்ணாவிரதம்

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த பௌத்த விகாரைகளையும் மட்டக்களப்பு நகரிலுள்ள மங்களராமய பௌத்த விகாரையையும் உடனடியாக புனரமைத்து தருமாறு கோரி மட்டக்களப்பில் நேற்று காலை முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பிரதம சங்க நாயக்கரும் மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதியுமான அம்பியிட்டிய சுமணரத்தின தேரரினாலேயே உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. நேற்று காலை 6 மணிக்கு மட்டக்களப்பு நகரிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இந்த சாகும் வரையிலான உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த பௌத்த விகாரைகளையும் மட்டக்களப்பு நகரிலுள்ள மங்களராமய விகாரையையும் புனரமைத்து தருமாறு அரசாங்கத்திடம் பல தடவைகள் கேட்டும் கோரிக்கைகள் விடுத்தும் எதுவித பலனும் இல்லை. இதனாலேயே தான் இந்த சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தினை ஆரம்பிக்க அம்பிட்டிய சுமணரத்தின தேரர் தெரிவித்தார்.

இவர் உண்ணாவிரதம் இருக்கும் இடத்தினை சுற்றி பொலிஸாரினால் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (6-2)

## முன்பள்ளி விளையாட்டு விழா

நவாலி இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முதலியார் மகேசன் இல்ல விளையாட்டு மைதானத்தில் நவாலி இ.ச.வி. சங்க தலைவர் சு.மோகனமுரளி தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் கோவில்பற்று இ.ச.வி சங்கத்தலைவர் செல்வி இ. சுப்பையாப் பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வலி தென் மேற்கு பிரதேச சபை உள்ளூர்ராட்சி உதவியாளர் இ.கிருஸ்ண குமார் கலந்து கொள்ளவுள்ளார். (4)

## நாட்டில் காட்டுச் சட்டத்தை அமுல்படுத்த அனுமதிக்க முடியாது

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் காட்டுச் சட்டத்தை அமுல்படுத்த அனுமதிக்க முடியாது என அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற சட்டத் திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தனிநபரும் சட்டத்தை கையில் எடுத்துச் செயற்பட அனுமதிக்க முடியாதெனவும் நாட்டில் காட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அதன் மூலம் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் நாட்டின் சகல பாகங்களிலும் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் சட்டம் தொடர்பான நாட்டு மக்களுக்கு போதியளவு விளக்கம் அளிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

## கண்டியில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் — 65 பேருக்கு திடீர் இடமாற்றம் —

(கொழும்பு)

ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒரே பிரதேசத்தில் கடமையாற்றிய கண்டி பொலிஸ் உத்தியோகத்தர்கள் 65 பேருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து அல்லது ஆறு வருடங்கள் மேலாக ஒரே பிரதேசத்தில் கடமையாற்றியவர்களை இடமாற்றம் செய்யும்படி மத்திய பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்கவே மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்றும் இவ்வாறு இடமாற்றம் பெற்றவர்கள் வேறு மாவட்டங்களுக்கு மாற்றம் பெற்றுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. (6-2)

# இலங்கை செல்லும் விசேட தூதுவர் என்ன செய்ய வேண்டும்?



கார்ட்டூனிஸ்ட் மதி சமீபத்தில் ஒரு கருத்துப் படம் வரைந்திருந்தார். ஈழப் பிரச்சினை தொடர்பாக கருணாநிதி அனுப்பிய கடிதத்துக்கு மன்மோகன் சிங் பதில் கடிதம் அனுப்பியதைக் கேலி செய்த படம் 'போற போக்கைப் பார்த்தால், இலங்கைப் பிரச்சினை தீர்ந்திருக்கும்போல இருக்கே' என்று அப்பாவி ஒருவன் சொல்வதாக அது அமைந்திருந்தது.

பிரதமர் இந்திரா காலத்தில் அனுப்பப்பட்ட பார்த்தசாரதி முதல், நாளை மன்மோகன் சிங் அனுப்பக் காத்திருக்கும் வெளியுறவுத்துறை அதிகாரி வரை இதுவரை டெல்லிக்கும் கொழும்புக்குமாகப் பறந்தவர்களை வரிசையாக நிறுத்தினாலே, அவர்கள் கழுத்தைப் பிடித்துக்கொண்டே கடலைக் கடந்துவிடலாம். அத்தனை பேர் போய் வந்துவிட்டார்கள். அடுத்ததாகப் போகவும் ஒருவர் காத்திருக்கிறார்.

கிராமத்தில் சொல்வார்கள், 'கைப் புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?' என்று இலங்கையில் என்ன நடக்கிறது, என்னதான் நடக்கும் என்பதைப் போய்ப் பார்த்தால்தான் தெரியுமா என்ன?

சமீபத்தில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனத்துக்கு ஈழத்து நிலைமையைச் சொன்ன அதன் நிருபர், 'இங்கு இரவு நேரத்தில் தனித்திருக்கும் ஆண்களும் பெண்களும் ஊளையிடுகிறார்கள். அவர்கள் அனைவருமே ஏதாவது ஒரு வகையில் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்' என்று சொன்னார். அந்த அளவுக்கு மனநலம் குன்றியவர்களால், விதவைகளால், தாய் - தந்தையர் இழந்த அநாதைகளால் ஆனதாக ஈழ தேசம் ஈனஸ்வரத்தில் அழிவில், இழிவில் துடிக்கிறது.

'இலங்கை மக்களுக்கு என்ன செய்யலாம்?' என்று இப்போது தான் அக்கறை வந்தவர் போல தமிழக முதல்வர் கருணாநிதியைக் கேட்கிறார் பிரதமர் மன்மோகன் சிங். 'அரசியல் தீர்வு ஒன்றுதான் இதற்கு நிரந்தரத்தீர்வு. எந்த வாக்குறுதியை எல்லாம் இலங்கை வழங்கியதோ, அதில் எதையும் நிறைவேற்றவில்லை. எனவே, அதைப் பார்வையிட ஒரு சிறப்புத் தூதரை அனுப்பி வையுங்கள்' என்று கருணாநிதியும் பதில் தர.... இப்போது வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் அனுப்பி வைக்கப்பட இருக்கிறார்.


**புதிய தூதர் என்ன செய்வார்?**

கொழும்பில் இறங்குவார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பார். வடகிழக்கு மாகாணத்தில் செய்யப்பட்டு வரும் நிர்மாணப் பணிகள் தொடர்பாக பசில் ராஜபக்ஷவிடம் பேசுவார். ஒருவேளை தமிழர் வாழும் பகுதிகளுக்குப் போக ஆசைப்பட்டால் பத்துப் பதினைந்து குடும்பங்களைக் கொண்டுவந்து காட்டி, புகைப்படம் எடுத்து அனுப்பி வைத்து விடுவார்கள். இதைத் தவிர எதுவும் நடக்காது. ஆனால், இப்படி வரவிருக்கும் அதிகாரியைப் பற்றி இலங்கை அடித்த விமர்சனம் தான் இந்த இடத்தில் முக்கியமானது.

'இந்திய அதிகாரி இலங்கைக்கு வரலாம். இடம் பெயர்ந்தோர் நிலைமை தொடர்பாக ஆராயலாம். இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் பேச்சுக்களை நடத்தலாம். ஆனால், இரு நாடுகளுக்கும் இடையில் அது சுமுக உறவின் அடிப்படையில் இடம்பெற வேண்டும். அதனை விடுத்து , இலங்கைக்குப் பலவந்தமாகப் பருப்பு போட்டதைப் போன்றதாக அது இருக்கக் கூடாது ,என்று இலங்கை ஊடகத் துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல அறிவித்திருப்பது இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட பகிரங்கமான மிரட்டல்.

இந்திய பிரதமர் ராஜீவ் காலத்தில் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு விமானத்தில் எடுத்துச் சென்று உணவுப் பொட்டலத்தைப் போட்டதைத்தான் அமைச்சர் கெஹெலிய இப்படிக் கிண்டல் செய்கிறார். மன்மோகன் சிங்கால் இதுவரை அனுப்பி வைக்கப்பட்ட எந்தத் தூதரும் உண்மையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குப் போகக் கூட

## தமிழ் மக்களின் மனதிலுள்ள கேள்விகளுக்கு பதில் வேண்டும்



முயற்சிக்கவில்லை என்பதை உணர்ந்தாலும் இந்தியாவை இலங்கை எவ்வளவு தூரம் ஏளனமாகப் பார்க்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் " மக்களின் விடிவுக்காகப் போராடிய எம்மைப் பயங்கரவாதிகளாக ஆக்கிய இலங்கை தற்போது ஐ.நா-வின் பிடியில் சிக்கியுள்ளது. இதுவரை இனவெறி கொண்ட இலங்கையிடம் நாம் பட்ட துன்பத்தைத் தற்போது சர்வதேசம் அனுபவிக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். ஐ.நா. சபை அலுவலகத்தையே இலங்கையில் அனுமதிக்காமல் இந்தியா அனுப்பி வைக்கும் தூதர் வருவதற்கு முன்னால் மிரட்டலை விடுத்து தெற்காசியப் பிராந்தியத்தில் 'பேட்டை தாதா' வாக வலம் வரும் ஒரு நாட்டிடம் இந்தியத் தூதர் கேட்க வேண்டிய விடயங்கள் ஏராளமாக இருக்கின்றன.

◆ ஈழத்தின் நான்காவது கட்டப் போர் தொடங்கிய 2005 ஆம் ஆண்டுக்கு முன் இருந்த வட கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொகை எவ்வளவு? இன்றைய மக்கள் தொகை எவ்வளவு? போர் நடந்த காலத்தில் இறந்தவர் எத்தனை?

இப்போது இருப்பவர் எத்தனை பேர் என்ற கணக்குத் தான் இலங்கைப் பிரச்சினையின் இன்றைய அடிப்படை அளவுகோலாக இருக்கிறது. இதன் அடிப்படையில் தான் அவர்களது வாழ்வாதாரங்களை அமைக்கமுடியும்!

◆ இன்னமும் முள்வேலி முகாமில் இருப்பவர்களின் எண்ணிக்கையை இலங்கை அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் மாற்றி மாற்றிச் சொல்கிறார்கள். டில்லி வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் 56 ஆயிரம் பேர் இருப்பதாகச் சொல்கிறார். 40 ஆயிரம் பேர் இருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எழுதிய கடிதம் சொல்கிறது. கடந்த வாரத்தில் இலங்கை அமைச்சர் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேரை மீள் குடியேற்றம் செய்ததாக அறிவிக்கிறார். மீதி இருப்பவர்கள் எத்தனை பேர் என்பதைச் சொல்லவில்லை!

◆ மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தங்களது சொந்த ஊர்களில் குடியேறியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் வாழும் அந்த வீடுகள் வசதியுள்ளதாக இருக்கின்றனவா? மொத்தமாக இடித்துத் தகர்க்கப்பட்ட வீடுகளில் எப்படிஅவர்களால் வாழ முடியும்? அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ள அவர்களுக்கு வசதி வாய்ப்புக்ள் செய்து தரப்பட்டுள்ளனவா? பட்டினிச் சாவுகள் அங்கு அதிகம் நடப்பதாகத் தொண்டு நிறுவனங்கள் சொல்கின்றன.

◆ விவசாயம்,மீன்பிடித்தல் ஆகிய இரண்டும் தான் அந்தப்பகுதி மக்களின் மிக முக்கியமான தொழில்களாக இருந்தன. ஆனால், இன்று விவசாயம் செய்த நிலங்கள் தரப்படவில்லை. மீன்பிடிக்கக் கடல் பகுதிக்கு அனுமதிக்கப்படுவது இல்லை என்கிறார்கள். அதற்கான வழிவகைகள் எப்போதுதான் செய்து தரப்படும்?

◆ சுமார் 11ஆயிரம் எண்ணிக்கையில் புலிப் போராளிகள் தங்களிடம் சரணடைந்து இருப்பதாகவும், பெண் போராளிகள் 3 ஆயிரம் பேர் வந்திருப்பதாகவும் அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்தது. அவர்கள் எங்கு தங்கவைக்கப்பட்டு உள்ளார்கள்? அவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள்? வழக்குகள் அவர்கள் மீது பதிவாகும் என்றால், தனியாக விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுமா என்பது குறித்து இதுவரை எந்த அறிவிப்பும் இல்லை!

◆ புலிகள் அமைப்பின் மிகமுக்கிய பொறுப்பாளர்களாக இருந்த பாலகுமார்,பேபி சுப்பிரமணியன்,புதுவை இரத்தினதுரை, யோகி... உள்ளிட்டவர்கள் உயிருடன் இருக்கிறார்களா அல்லது சிறை வைக்கப்பட்டுள்ளார்களா என்பது குறித்து முழு விபரங்கள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அடுத்த நிலையில் இருந்த தளபதிகள், கேணல்கள் என ஏராளமானவர்கள் என்ன ஆனார்கள் என்றும் தெரியவில்லை.



◆ தமிழர்களின் பூர்வீக பூமியாகச் சொல்லப்படும் வடகிழக்கு மாகாணத்தில் இன்று சிங்களவர்கள் அதிகம் குடியேற்றப்படுவதும், புத்த கோயில்கள் அதிக அளவில் நிர்மாணிக்கப்படுவதுமான தகவல்கள் உலகத்தமிழர்கள் மத்தியில் பரவி வருகிறது.இதைப் பகிரங்கமாக இலங்கை அரசாங்கம் மறுக்கவில்லை. யார் சொல்வது உண்மை என்பது விளக்கப்படவேண்டும்.

◆ தனியார் தொண்டு நிறுவனங்கள், சேவை அமைப்புகளின் செயற்பாடுகள் முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளன. செயற்படத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதே தெரியவில்லை. இது போன்ற அமைப்புக்களைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும்!

◆ கொழும்பு,யாழ்ப்பாணம், வட கிழக்கு மாகாணங்கள் ஆகிய தமிழர் வாழும் பகுதிகள் அனைத்திலும் மக்கள்

**ஆனந்த விகடன்**

குறை கேட்புக் கூட்டங்களை நடத்தி, உண்மை நிலைமையை அறிய வேண்டும்.

◆ அனைத்துக்கும் மேலாக,இதுவரை இந்தியா கொடுத்த 500 கோடி ரூபாய் எப்படி, எதற்காகச் செலவழிக்கப்பட்டது என்ற கணக்கை வாங்க வேண்டும். இனி நாம் தர இருக்கிற ஆயிரம் கோடியை என்ன விடயங்களுக்காகச் செலவழிக்கக் காத்திருக்கிறார்கள் என்பதையும் அறிவிக்க வேண்டும்.

தமிழர்களின் மனதில் உள்ள இந்தக் கேள்விகளுக்கான பதில்களே இன்றைய தேவை. இவை எதுவும் இலங்கை அரசாங்கத்தின் இராணுவ இரகசியங்களோ, அதன் இறையாண்மைக்கு எதிரான விடயங்களோ அல்ல. கருணாநிதி ஆலோசனைப்படி மன்மோகன்சிங் அனுப்பி வைக்கும் அதிகாரி இந்தத் தகவல்களை எல்லாம் வாங்கி வந்தால், அவர் தூதர். இல்லையென்றால் ஓரங்க நாடகத்தில் அவரும் ஒரு நடிகர்.

# சீனாவிடமிருந்து இரு விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன

(கொழும்பு)

சீனாவில் தயாரிக்கப்பட்ட எம்.ஏ 60 ரக 2 விமானங்களை அரசாங்கம் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையொன்று ஸ்கைச்சாத்திடப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கும் சீனா நிறுவனத் திற்கு இடையில் நேற்று முனதினம் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள் ளது.

உள்நாட்டு விமான சேவையை ஊக்குவிக்கும் வகையிலேயே இந்த விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவதாக துறை முகங்கள் மற்றும் விமான சேவைகள் பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இதில் இந்த உடன்படிக்கையின் பிரகாரம் எதிர்வரும் 2 அல்லது 3 மாதங்களில் குறித்த விமானங்களை நாட்டிற்கு கொண்டுவர முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. எம்.ஏ.60 ரக விமானத்தில் 56பயணிகள் பயணிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)

# நீதிமன்றங்களை விமர்சிப்பதன் மூலம் சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு) நீதிமன்றங்களை விமர்சிப்பதன் மூலம் சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நீதவான்கள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் தற்போது பணியாற்றி வரும் 50 வீதமான நீதவான்கள் தமது மாணவர்கள் எனவும் அவர்கள் மிகவும் திறமையானவர்கள் எனவும் அவர்களுக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நீதவான்கள் பாராளுமன்றில் விமர்சனம் செய்யப்படுகின்ற போதிலும் பதிலளிப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடையாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றக் கட்டமைப்பின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதன் மூலம் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்ளை சுமத்துவோருக்கு சாதகமான சூழ்நிலை ஏற்படும் எனவும் இலங்கைக்கு எதிரான சர்வதேச நீதிமன்ற விசாரணைகள் போன்றவற்றுக்கு இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வழிகோலும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிகாரிகளை மரத்தில் கட்டி தண்டிக்கும் போது நாட்டில் நீதியை எதிர்பார்க்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்த போது அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# விடுதலைப்புலிகள் நாடு கடந்த பயங்கரவாத முயற்சிகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்

## அமெ.முன்னாள் பிரத் ராஜாங்க செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் நாடு கடந்த பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முயற்சிப்பதாக தென் மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் க்ளாட் தெரிவித்துள்ளார்.

200 இலங்கை சட்டவிரோதக் குடியேறிகளை ஏற்றிய கப்பல் ஒன்று அமெரிக்கா நோக்கி பயணித்து வருவதாகவும் இது பயங்கரவாத நடவடிக்கையின் ஓர் அங்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் முன்னணி ஊடகங்களில் ஒன்றான வோஷிங்டன் போஸ்ட்டுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் தமது வலையமைப்பை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறித்த புகலிடக் குடியேறிகளில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களும் அடங்குவதாகவும் தெரிவித்துள்ளார். (6-2)




ரெலிகொம் நிறுவனத்தின் முற்கொடுப்பனவு அட்டை விற்பனை முகவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் ஆனைக்கோட்டை துரை ஐயா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ரெலிக்கொம் நிறுவனப் பணிப்பாளர் கிறேக் யங் இற்கு யாழ். மாவட்ட முகவர் தேவராஜா நினைவுப் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

# 06.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1661 - போர்த்துக்கல்லுக்கும் டச்சுக் குடியரசுக்கும் இடையில் டச்சு பிரேசில் தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது.
- 1806 - கடைசி புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பிரான்சிஸ் நெப்போலியனுடனான போரில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அப்பேரரசு முடிவுக்கு வந்தது.
- 1825 - பொலிவியா ஸ்பெயினிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜெர்மனியின் 10 கடற்படை படகுகள் பிரித்தானியப் படகுகளைத் தாக்கவென வடகடலை நோக்கிப் புறப்பட்டன.
- 1914 - முதலாம் உலகப் போர்: சேர்பியா ஜெர்மனி மீதும் ஆஸ்திரியா ரஷ்யா மீதும் போரை அறிவித்தன.
- 1952 - இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம் மாறியது.
- 1960 - கியூபா புரட்சி: அமெரிக்கா கியூபா மீது பொருளாதாரத் தடை விதித்ததை அடுத்து கியூபா தனது நாட்டில் இருந்த அமெரிக்க மற்றும் வெளிநாட்டு மூலதனங்களை நாட்டுடைமை ஆக்கியது.
- 1961 - வஸ்தோக் 2: முதன் முதலாக ஒரு முழு நாள் மனிதன் விண்வெளியில் இருந்த பெருமையை சோவியத் விண்வெளிவீரர் கேர்மொன் டிட்டொவ் பெற்றார்.
- 1962 - ஜமெய்க்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1964 - அமெரிக்காவில் நெவாடா மாநிலத்தில் உலகின் மிகப் பழைமையான மரமாகக் கருதப்பட்ட 4900ஆம் ஆண்டு பழைமையான புரோமேத்தியஸ் என்ற மரம் வெட்டப்பட்டது.
- 1991 - உலகளாவிய வலை (WWW) தொடர்பான தனது ஆவணங்களை டிம் பேர்னேர்ஸ்-லீ வெளியிட்டார்.
- 1996 - செவ்வாயில் இருந்து தோன்றியதாகக் கருதப்படும் ஏ.எல்.எச் 84001 என்ற விண்கல் ஆரம்பகால உயிரினங்கள் பற்றிய தகவலைக் கொண்டிருப்பதாக நாசா அறிவித்தது.
- 1997 - வட கொரிய போயிங் விமானம் ஒன்று குவாமில் வீழ்ந்ததில் 228 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - தமிழ்நாடு ஏர்வாடியில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த 11 பெண்கள் உட்பட 28 மன நோயாளிகள் தீ விபத்தில் கொல்லப்பட்டனர்.
- 2006 - திருகோணமலையில் நோயாளரை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வண்டி எறிகணைத் தாக்குதலுக்குள்ளானதில் ஒரு நோயாளி கொல்லப்பட்டார்.


### பிறப்புகள்

- 1881 - அலெக்சாண்டர் பிளெமிங், நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர் (இ. 1955)
- 1970 - எம்.நைட் ஷியாமளன், ஹாலிவுட் இயக்குனர்

### இறப்புகள்

- 1978 - பாப்பரசர் ஆறாம் சின்னப்பர் (பி. 1897)
- 2009 - முரளி, மலையாள நடிகர் (பி. 1954)

**1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா சின்னப் பையன் என்ற பெயரைக் கொண்ட அணுகுண்டை வீசியது. கிட்டத்தட்ட 70,000 பொதுமக்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். இதன் தாக்கத்தினால் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் அடுத்த சில ஆண்டுகளில் இறந்தனர்.**



## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பயோடீசல் - ஒரு மாற்று எரிபொருள் வளம்




ஆரம்பத்தில் டஃபி மற்றும் ஜே.பேட்ரிக் ஆகியோரால் நடத்தப்பட்டது. அதற்கு பல வருடங்களுக்குப் பின் பயோடீசலைப் பயன்படுத்தி 1893 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 10 ஆம் திகதி ஜேர்மனியின் ஆகஸ்பாக் நகரில் முதல் டீசல் இயந்திரம் ஓடியது. இதன் நினைவாக ஆவணி 10 ஆம் திகதி சர்வதேச பயோடீசல் தினமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உலகின் முக்கியமான சக்தி வளங்களில் சுவட்டு எரிபொருளும் ஒன்றாகும். அதிகரித்து வருகின்ற சனத்தொகைக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஏற்ப சுவட்டு எரிபொருளின் பாவனையும் அதிகரித்து வருகின்றது.

எனினும் இது ஒரு வரையறுக்கப்பட்ட வளமாகையால் அதிகரிக்கும் நுகர்வுக்கேற்ப, வழங்கல் கடினமாகிறது. எனவே பெற்றோலிய எரிபொருளுக்கான மாற்று வளங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

சுவட்டு எரிபொருளுக்கான ஒரு சிறந்த மாற்று வளம் உயிர் எரிபொருள் (பயோடீசல்) ஆகும். பயோடீசலானது மாறுபடும் நிறத்தினைக் கொண்டது. இதன் நிறமானது தங்க நிறத்திலிருந்து அடர் பழுப்பு நிறம் வரை மூலப்பொருளைப் பொறுத்து வேறுபடுகிறது. அத்துடன் நீருடன் கலக்கும் தகவற்றது. குறைந்த ஆவி அமுக்கமும் உயர் கொதி நிலையும் உடையது. இதன் தீப்பற்று நிலையானது (>130°C) பெற்றோலிய டீசலின் (64°C) தீப்பற்று நிலையை விட உயர்வாகும். இதன் அடர்த்தி (0.88g/$cm^3$) நீரின் அடர்த்தியை விடக் குறைவாகும்.

பயோடீசலானது தாவர எண்ணெய் அல்லது விலங்குக் கொழுப்பு மூலப் பொருட்களை Transesterification தாக்கங்களுக்கு உட்படுத்துவதன் மூலம் தயாரிக்கப்படுகிறது. தாவர எண்ணெயானது காரங்கள் போன்ற ஊக்கிகளின் முன்னிலையில் மெதனோல் போன்ற அற்ககோல்களுடன் தாக்கமடைய விடப்பட்டு அற்கைல் எசுத்தர்களாக மாற்றப்படுகின்றன.



தாவர எண்ணெய்

தாவர எண்ணெயின் Transesterification ஆனது 1853 ஆம் ஆண்டின்

சோயா ரேப்விதை பென்னிகிரெஸ், சற்றுறோபா, கடுகு, ஆளிவிதை , சூரியகாந்தி, பாம்எண்ணெய், தேங்காய், சணல், பட்டாணி விதை போன்ற தாவர எண்ணெய்கள், கழிவு தாவர எண்ணெய்(WVO) ,மாட்டுக் கொழுப்பு, பன்றிக் கொழுப்பு, மஞ்சள் மசகு, கோழிக் கொழுப்பு, மீன் எண்ணெயிலிருந்து பெறப்படுகின்ற ஒமேகா 3, கொழுப்பு அமிலங்கள், அல்கா, சலிகோர்ணியா, மிக்ஜெலோவி போன்ற உவர் நிலத்தாவரங்களிலிருந்து பெறப்படும் எண்ணெய் (Tallow), போன்ற பல்வேறு எண்ணெய்களிலிருந்து உயிர் எரிபொருளை உற்பத்தி செய்ய முடியும்.

தற்போது பூஞ்சணத்திலிருந்து பயோடீசலை தயாரிப்பதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக கிளைக் வாடியம் ரோசெம் பூஞ்சணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவை செலுலோசை பொதுவான டீசல் எரிபொருளில் காணப்படும் மிதமான நீளமுடைய ஐதரோகாபன்களாக மாற்றும் தனிப்பட்ட திறனைக் கொண்டுள்ளன. அது தவிர, ரெனோவின் நேவடா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தப்பட்ட காப்பி திப்பிகளிலிருந்து பெறப்பட்ட எண்ணெயிலிருந்து பயோடீசலை தயாரித்திருக்கின்றனர்.

பயோடீசலானது பல்வேறு பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.

எரிபொருளாகப் பயன்படுத்துதல் இதன் பிரதான பயன்பாடு ஆகும். இதனை பெற்றோலிய டீசலுடன் கலந்தோ அல்லது தனியாகவோ பயன்படுத்தலாம். 20% பயோடீசல் கலக்கப்பட்ட பெற்றோலிய டீசலானது B20 எனவும் தூய பயோடீசலானது B100 எனவும் குறிப்பிடப்படுகின்றது.

எனினும் பயோடீசலின் வேறுபட்ட கரைப்பான் பண்புகள் காரணமாக இது வாகனங்களின் இறப்பர் இணைப்பிறுக்கிகளையும், குழாய்களையும் தரமிழக்கச் செய்யும். இதனால், பயோடீசலுக்கு எதிர்விளைவற்ற பதார்த்தங்களால் இறப்பர் குழாய்களை மாற்றியமைத்தல் வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது.




அத்துடன் பெற்றோலிய டீசல் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் வரிசைகளில் கசடின் படிவுகளை உடைக்கும் இதனால் எரிபொருள் வடிப்பான்கள் அடைபடக்கூடும் எனவே வாகனங்கள் பயோ டீசலுக்கு நிலைமாற்றம் செய்யப்பட்டு சிறிது காலத்தின் பின் எரிபொருள் வடிப்பான்களை மாற்றுதல் அவசியமாகும். ரயிலில் கூட எரிபொருளாக பயோடீசல் பயன்படுத்தப்படுகிறது.

பயோடீசலில் இயங்கும் 'ரோயல் ரயில்' ஆனது இங்கிலாந்தில் 2007 ஆம் ஆண்டிலிருந்து இயக்கப்படுகிறது.

இதுதவிர பயோடீசலை வீட்டு உபயோக மற்றும் வணிக ரீதியான கொதி கலன்களில் வெப்பமூட்டும் எரிபொருளாகவும் பயன்படுத்த முடியும்.

B20 பயோடீசலின் பாவனையானது ஐக்கிய இராச்சியத்தின் வீட்டு உபயோக $CO_2$ உமிழ்களை ஆண்டுக்கு 1.5 மில்லியன் தொன்னாக குறைக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.




பயோடீசலின் கூறான மெதயில் எசுத்தரிலிருந்து தயாரிக்கப்படுகிற கொழுப்பு அற்ககோல்கள்(Fatty alcohols) அழுக்ககற்றும் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

கிளை கொண்ட கொழுப்பமில எசுத்தர்கள் மசகு கண்ணெயாக உபயோகிக்கப்படுகின்றன. இவை இலகுவில் உயிர்ப்பிரிகையாதலுக்கு உட்படக்கூடியவையாதலால் சூழலுக்கு தீங்கு விளைவிப்பதில்லை.

பயோடீசல் வேறுபட்ட கரைப்பான் பண்புகளைக் கொண்டிருப்பதால் பெற்றோலிய எண்ணெயால் மாசுபடுத்தப்பட்டுள்ள கடற்கரைகளைச் சுத்தப்படுத்தும்ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது. மெதயில் சோயா எசுத்தர் ஆனது சிறந்த சேதனக் கரைப்பானுக்குரிய இயல்புகளைக் கொண்டுள்ளது.

ரேப்விதை எண்ணெயிலுள்ள மெதயில் எசுத்தரானது பிளாஸ்ரிக் உற்பத்தியில் Plasticizer ஆகப் பரிந்துரைக்கப்படுகிறது.

தொழிற்சாலைகளிலிருந்து விடுக்விக்கப்படுகின்ற , ஆவிநிலைக் கழிவுகளை அகத்துறிஞ்சக்கூடிய உயர் கொதி நிலைத் திரவமாகவும் பயோடீசல் தொழிற்படுகிறது.

செல்வி. சுதர்சனா இரவிச்சந்திரன்
(இரசாயனவியல் துறை - இறுதிவருட மாணவி),
விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

இதுதவிர, உயர் வினைத்திறனுடன் எரியக்கூடிய மெழுகுவர்த்திகளைத் தயாரிப்பதற்கு ஐதரசனேற்றப்பட்ட கொழுப்பு அற்கைல் எசுத்தர்கள் பரவீன் அல்லது காபொட்சாலிக் அமிலங்களுடன் கலந்து பயன்படுத்தப்படுகிறது.

பயோடீசலானது சூழலுக்கு தேறியதாக $Co_2$ஐ விடுவிப்பதில்லை எனக் கருதப்படுகிறது. அத்துடன் இது கந்தகத்தைக் கொண்டிராமையால் கந்தக ஒட்சைட்டுக்களையும் எரிதலின் போது விடுவிப்பதில்லை. எனவே பயோடீசலின் பாவனையானது பச்சை வீட்டு உமிழ்வுகள், காடழித்தல் , சுற்றுச் சூழல் மாசுமற்றும் தாவர படிவுச் சிதைவு வீதம் என்பவற்றைக் குறைக்கும் சாத்தியத்தை கொண்டுள்ளது. எனினும்இதன் பாவனையின் போது வெளி விடப்படுகின்ற ($No_x$) நைதரசன் ஒட்சைட்டுக்கள் சூழலை மாசடையச் செய்கின்றன.

அத்துடன் இதன் உற்பத்தியானது பெற்றோலிய டீசலுடன் ஒப்பிடும் போது செலவுகூடியதாகும். பயன்படுத்தப்பட்ட தாவர எண்ணெய்களை மூலப் பொருளாகப் பயன்படுத்துவதன் மூலம் செலவைக் குறைக்கலாம். எனினும் சில நாடுகளில் பொற்றோலிய டீசலை விட பயோடீசல் தற்போது விலை குறைவானது ஆகும்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 27

**உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹாலின் பளிங்கு வடிவம் வனப்பிழந்து போகின்றமைக்குக் காரணமான வாயு எது?**

**விடைகளை 25-08-2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 25க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**


செல்வராசா செந்தூரன்
41/1 பிரம்படி வீதி,
கொக்குவில்.

**புதிர் 26 இற்கான விடை: ஐங்கோணி (Pentagon)**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 27

சரியான விடை : ..............................
முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
: ..............................
: ..............................
கையொப்பம் : ..............................







யாழ்.கல்விவலய குடும்பப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாடுகளுக்கான மாணவர் பயிலமர்வு முகாம் நேற்று பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களையும் குடும்பப் பாடசாலைகளுக்கான பொறுப்பாசிரியர் எஸ்.ஜெயகாந்தன், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.சந்திரிக்கா ஆகியோர் மாணவர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# போலி நாணயத்தாள்களை வைத்திருந்த பாகிஸ்தான் பிரஜைக்கு அபராதம்

போலி இந்திய நாணயத் தாள்களை வைத்திருந்த பாகிஸ்தான் பிரஜையொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் 25 இலட்சம் ரூபா அபராதமும் 10 வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 3 வருட சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது.

கடந்த ஜுன் 28 ஆம் திகதி கொழும்பில் அவர் 500 மற்றும் ஆயிரம் போலி இந்திய நாணயத்தாள்கள் ஒரு தொகையை வைத்திருந்ததாக பாகிஸ்தானைச் சேர்ந்த மொஹமட் எலாஹி அமீர் என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அவற்றின் மொத்தப் பெறுமதி 4 இலட்சம் ரூபாவாகும்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மேற்படி நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அதையடுத்து அவருக்கு மேற்படி தண்டனையை வழங்கி நீதிபதி சுனில் ராஜபக்ஷ தீர்ப்பளித்தார். அத்துடன் அந்நபரை நாட்டை விட்டு வெளியேற்றும் படி குடிவரவு- குடியகல்வு அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார். (6)

# பாலித ரங்கே பண்டாரவின் கடவுச்சீட்டை பரிசோதிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

போலி விசா தயாரிக்கப்பட்டமை சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் கடவுச்சீட்டை சந்தேகத்திற்கிடமான ஆவணங்களை பரிசோதிக்கும் அரச ஆய்வாளரிடம் சமர்ப்பித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இராஜதந்திர கடவுச்சீட்டு உட்பட 5 கடவுச் சீட்டுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பான மேலதிக அறிக்கையை சமர்பித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை அடுத்து நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் விசா பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் நோர்வேக்கான விசா அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்பிக்கப் பட்ட இராஜ தந்திர கடவுச்சீட்டு உட்பட 5 கடவுச் சீட்டுகள் தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்திற்கு அமைய நோர்வே தூதரக அதிகாரி இந்த முறைப்பாட்டை செய்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டாரவின் இராஜதந்திர கடவுச்சீட்டு உட்பட அவரது குடும்பத்தினரின் கடவுச்சீட்டுகள் விசா பெறுவதற்கான நோர்வே தூதரகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சமர்பிக்கப்பட்ட கடவுச்சீட்டுகளில் பெறப்பட்டிருந்த விசாக்களில் போலி விசாக்கள் இருப்பதாகவும் இது குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் ரங்கே பண்டாரவின் கடவுச்சீட்டு உள்ளிட்ட ஏனைய கடவுச்சீட்டுகளில் கெமரூன் நாட்டுக்கான போலி விசாக்கள் காணப்பட்டதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, தாம் மேற்கொண்ட விசாரணைகளின்படி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் இராஜதந்திர கடவுச்சீட்டில் 53 ஆம் பக்கத்தில் இலக்கம் 6 எஸ்.ஆர்.ஐ.37 என்ற கெமரூன் நாட்டுக்கான போலி விசா காணப்பட்டதாகவும், 54 ஆம் பக்கத்தில் 4211523 என்ற இலக்கத்தை கொண்ட தாய்லாந்து விசாவும் காணப்பட்டதாகவும் தாய்லாந்து விசா உரிய முறையில் ஒட்டப்பட்டிருக்கவில்லை என்றும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த கனடா மற்றும் பிரித்தானிய விசாக்களுக்கு மேலாக இந்தத் தாய்லாந்து விசாவுக்கான ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தாகவும் குறிப்பிட்டுள்ளது. (6-2)

# இலங்கையை ஆசிய கடற்பிராந்தியத்தின் கேந்திர நிலையமாக மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை ஆசியக் கடற் பிராந்தியத்தின் கேந்திர நிலையமாக மாற்றப்படும் என்று இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம தெரிவித்துள்ளார். இதற்கென திட்டமிட்ட வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆசியாவில் அபிவிருத்தி அடைந்த கேந்தர நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வது திட்டத்தின் நோக்கமாகும் என்றும் இந்த வேலைத்திட்டத்தை துரிதமாக நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# வடக்கு கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழில் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஜே.வி.பி பாராளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு- கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழ் மொழியில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டு மென ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்குமார தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு- கிழக்கு மக்களின் மொழி உரிமையை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா உயர்நீதிமன்றத்தில் சிங்கள வர் ஒருவர் நீதவானாகக் கடமையாற்றி வருவதாகவும் அவரது திறமை பற்றி எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாதென வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், பிரதேசத்தின் பெரும்பான்மை மக்களின் மொழியில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதே சாலச் சிறந்ததென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைளின் மூலம் வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலேயே சர்வதேச ரீதியில் நாட்டுக்கு களங்கம் ஏற்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வீட்டில் பணியாற்றிய பணிப்பெண்ணை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்த நீதவானுக்கு எதிராக இதுவரையில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை அறுதிப் பெரும்பான்மையைக் கொண்ட முல்லைத்தீவிலும் சிங்களவரே நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# கால் நடை வளத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

இலங்கையின் கால்நடை வளத்துறை இரண்டு கட்டங்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள் ளது இதில் பசுப்பால் உற்பத்தி 233 மில்லி லீற்றர்களாக அதிகரிக்கப்படவுள்ளது. ஜனாதிபதிக்கும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது கலந்துரையாடப்பட்ட தாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். இதேவேளை 2 ஆயிரத்து200 பல்கலைக் கழக மாணவர்களுக்கு விடுதி வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் இதற்காக 34 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

19
வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
July.2010 to Dec..2010
தமிழ் மொழி மூலம்
- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.08.2010



வடமாகாண கல்வித்திணைக்கள கணக்காளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று யாழ். கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண நிதிப்பிரிவின் பிரதிப் பிரதம செயலாளர் ஏ.மனோரஞ்சன் , வடமாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் எஸ். இராஜேந்திரன் , வடமாகாண கல்வித்திணைக்கள பிரதம கணக்காளர் திருக்கோணேஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட வடமாகாண கல்வித்திணைக்கள கணக்காளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# யாழ்.மாவட்டத்தின் உண்மையான வாக்காளர் எண்ணிக்கையை அடுத்த வருடம் அறியலாம்

## உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்வது தொடர்பிலும் இடாப்பில் திருத்தங்களை செய்வது குறித்தும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எவ்வாறான பணிப்புரையை விடுக்கின்றாரோ அதனை அவ்வாறே நிறைவேற்றுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் என்று யாழ். மாவட்டத்தின் உதவி தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தைவிட்டு வெளியேறியவர்களின் விருப்பத்தை அறியாது அவர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்க முடியாது என்று வலியுறுத்தும் நோக்கில் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தமை தொடர்பிலேயே குகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தைவிட்டு வெளியேறியவர்கள் மீண்டும் வரமாட்டார்கள் என்று உறுதிபடுத்தப்பட்டால், மட்டுமே அவர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்குவது குறித்த முடிவுக்கு செல்லவேண்டும் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் அரசாங்க தரப்பினரையும் தேர்தல்கள் ஆணையாளரையும் விரைவில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளோம் என்றும் பாராளுமன்றத்திலும் குரல் எழுப்புவதற்கு தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது,

எமது திணைக்களத்தின் யாப்புக்கு உட்பட்டே நாங்கள் செயற்பட முடியும். முக்கியமாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எவ்வாறான பணிப்புரைகளை விடுகின்றாரோ அவற்றை அவ்வாறே நிறை வேற்ற வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது.

எனவே யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர் பதிவு விடயம் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எவ்வாறான முடிவை எடுக்கின்றாரோ அதனை அவ்வாறே நான் நிறைவேற்றுவேன். அதுதான் எங்களின் பொறுப்பாகும்.

இதேவேளை வாக்காளர் பதிவு நடவடிக்கைகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராம சேவகர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இம்மாதம் 15 ஆம் திகதி வரை இந்த நடவடிக்கைகள் இடம்பெறும்.

அதனையடுத்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை கிராம சேவர்கள் என்னையும் எனது அலுவலக உத்தியோகத்தர்களையும் சந்தித்து விபரங்களை கையளிப்பார்கள்.

மேலும் எதிர்வரும் நவம்பர் மாதம் வரை யாழ்ப்பாண மாவட்ட மக்கள் என்னிடம் முறைப்பாடுகளை நேரடியாக சமர்ப்பிக்க முடியும். அது தொடர்பில் பரிசீலனை செய்ய நான் தயாராக இருக்கின்றேன்.

அந்தவகையில் அடுத்தவருடம் ஜனவரி அல்லது மார்ச் மாதமளவிலேயே யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் உண்மையான வாக்காளர்களின் எண்ணிக்கையை அறிந்துகொள்ள முடியும். (6-2)

# கண்டி நகரை அபிவிருத்தி செய்ய ரூ.500 மில். ஒதுக்கீடு

கண்டி மாநகரை மரபுரிமை நகராக அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 500 மில்லியன் ரூபாய் நிதியினை ஒதுக்கியிருப்பதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்தது.

1592 இல் போர்த்துக்கேயரால் கரையோரப் பிரதேசங்கள் கைப்பற்றப்பட்ட பின்னர் இத்தீவில் எஞ்சியிருந்த ஒரே இராஜதானியின் தலைநகராக கண்டி விளங்கியது.

போர்த்துக்கேயர் மற்றும் டச்சுக்காரர்களால் 16 ,17 ,18, ஆம் நூற்றாண் டுகளில் பல தடவைகள் படையெடுப்புக்கள் நடத்தப்பட்டன. இறுதியாக 1815 இல் பிரித்தானியரிடம் கண்டி வீழ்ந்தது குறிப்பிடத்தக்கது. (6-2)

# குமரன் பத்மநாதன் சிறையில் இல்லை பகிரங்கப்படுத்தினார் அமைச்சர் டியூ

குமரன் பத்மநாதன் என்கிற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேகநபர் எவரும் சிறையில் இல்லை என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரீஜெயசேகரவின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு பதில் அளித்தார்.

அவசியம் ஏற்பட்டால் இது தொடர்பாக விசாரணை நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். 8 ஆயிரத்து 780 புலிச் சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் 706 பேர் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள் 8 ஆயிரத்து 74 பேர் புனர்வாழ்வு அளிக்கப்படுகிறார்கள் என்றார். பத்மநாதன் என்ற பெயருடையவர்கள் பலர் இருக்கலாம். குமரன் பத்மநாதன் என்று இருப்பதாக தெரியவில்லை. அது தொடர்பாக கேள்வி எழுப்பினால் ஆராய்ந்து பார்த்து பதில் கூற முடியும் என்றார். (ச)

# பிரதியமைச்சர் சட்டத்தை கையிலெடுப்பாராயின் நீதிமன்றங்களை மூடிவிடுங்கள்-ஜயலத் எம்.பி

(கொழும்பு)

மரணதண்டனைக்காக யாராவது தனது கழுத்தை நீட்டுவார்களா என கேள்வி எழுப்பிய ஜயலத் ஜெயவர்த்தன எம்.பி.பிரதியமைச்சர் தண்டனை வழங்குவதனால் நீதிமன்றங்களை மூடிவிடுமாறு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நீதித்துறை திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

சட்டத்தை எவருக்கும் கையிலெடுக்கும் அதிகாரம் இல்லை. எனினும் பிரதியமைச்சர் சமுர்த்தி அதிகாரியை மரத்தில் கட்டிவைத்து தண்டனை வழங்கியுள்ளார். அவ்வாறெனின் நீதித்துறை எதற்கு? ஏன் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோருகின்றனர்? எனினும் பிரதியமைச்சர் தண்டனை வழங்கியுள்ளார். அப்படியாயின் நீதிமன்றங்களை மூடிவிடவும்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லை. இதனால் பொலிஸ் திணைக்களங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அநீதிக்கு எதிராக முறையிடமுடியாதுள்ளது என்பதுடன் பிரதியமைச்சர்கள் சட்டத்தை கையிலெடுத்தமை நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயலாகும் என்றார். (6-2)


# கல்வி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன

(தெல்லிப்பளை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் தெல்லிப்பளை கிழக்கு சித்தியம் புளியடி கலைச்செல்வி முன்பள்ளியில் நடத்தப்பட்டு வருகின்ற வறுமைக் கோட்டுக்குட்பட்ட தரம் 3 தொடக்கம் தரம் 8 வரை மாலை நேர வகுப்பில் கல்வியினை பயின்று வருகின்ற 62 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப் பிகள் மற்றும் கல்வி சார் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இவை நேற்று முன்தினம் புதன்கிழமை அகதிகள் புனர்வாழ்வு நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

# மகாத்மா காந்தியை பின்பற்றுங்கள்; அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவுரை

(வோஷிங்டன்)



ஆபிரிக்காவின் இளம் தலைவர்கள் இந்திய தேசத்தந்தை மகாத்மா காந்தியின் போதனைகளை பின்பற்றி நடக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவுரை வழங்கினார்.

ஆபிரிக்காவின் இளம் தலைவர்களை வெள்ளை மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது நாம் எதுவாக விரும்புகிறோமோ அதுவாகவே மாறிவிட வேண்டும். இதைத்தான் மகாத்மா அன்றே சொன்னார். நாம் உலகில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினால் மகாத்மா சொல்லியதை தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

ஆபிரிக்கக் கண்டத்தை உலகின் இணைப்புப் பாலமாகவே நான் கருதுகிறேன். ஆபிரிக்காவின் எதிர்காலம் இளம் தலைவர்களாகிய உங்கள் கையில்தான் உள்ளது. ஆபிரிக்க இளைஞர்களின் அறிவும், திறமையும் இந்த உலகத்தின் வளர்ச்சிக்கு தேவைப்படுகிறது. இதை நீங்கள் அளிக்க வேண்டும். ஆபிரிக்க இளைஞர்கள் தற்போது எத்தனையோ சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர். எனினும் இளைய சமுதாயத்தின் திறமையை வெளிக்கொணர கல்வி உதவி உட்பட பல்வேறு உதவிகளை அமெரிக்கா அளித்து வருகிறது. இதை முறையாகப் பயன்படுத்திக் கொண்டு இளைஞர்கள் முன்னேற வேண்டும்.

காலணி ஆதிக்கத்தை தூக்கியெறிந்து கென்யா விடுதலை பெற்ற காலகட்டத்தில்தான் எனது தந்தை அங்கிருந்து அமெரிக்காவுக்கு வந்தார். அவரை அமெரிக்காவுக்கு கொண்டுவந்து சேர்த்தது கல்விதான் இதனால் ஆபிரிக்கா இளைஞர்கள் தங்களுக்கு கிடைக்கும் கல்வி வாய்ப்பினை உயர்த்திக் கொள்ள முயல வேண்டும் தன்னிறைவு பெற்ற வளமான ஆபிரிக்காவை காண வேண்டும் என்றே நான் விரும்புகிறேன் என்றார் அதிபர் ஒபாமா. (6)

# யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் சிறப்பு மலர் 06-08-2010

## மூதறிஞரின் ஆசியுரை



இன்றையதினம் எமது வித்தியாலய ஸ்தாபகர் தின மற்றும் பரிசளிப்பு விழா சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன். ஆரம்பகாலத்தில் இருந்து இக் கல்லூரிக்கு பல பெயர்கள் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்டு வந்தபோதும் சயம்பற்ற பள்ளிக்கூடம் என்ற பெயரே மக்கள் மனங்களில் நிலைத்து விட்டது. ஏனெனில் சயம்பு என்ற பேரா சான் தன்னலம் கருதாது பாடசாலையுடன் இரண் டறக் கலந்த நிலையில் அர்ப்பணிப்புடன் சேவை யாற்றியமையே ஆகும்.

இப்பாடசாலையில் படித்துப் பட்டம் பெற்று வெளியேறிய கல்விமான்களின் தொகை சொல் லிலடங்காது. இப் புகழ் எக்காலத்திலும் தொடர இறைவனை இறைஞ்சுவதோடு இன்றைய விழா சிறப்புற நடைபெற எனது ஆசிகளை வழங்கி அமை கின்றேன்.

மூதறிஞர் கலாநிதி பண்டிதர்
பிரம்மஸ்ரீ
வைத்தீஸ்வரக்குருக்கள்
காரைநகர்.

## வளர்க வித்தியாலயம்!

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான ஸ்தாபகர் தினம் மற்றும் பரிசளிப்பு நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். காரைநகரில் இரு கல்விக் கண்களில் ஒன்றான கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் நீண்ட பாரம்பரியமும் கல்விச் செழுமையும் மிக்கது. பல கல்விமான் களையும் அறிஞர்களையும் தோற்றுவித்தது. போராலும் இடம்பெயர்வுகளாலும் மக்கள் புலம் பெயர்ந்த போதும் இடர்பட்ட காலத்திலும் சீரிய கல்விப் பணியாற்றியது. பல நெருக்கடிகள், இடையூறுகளுக்கு மத்தியிலும் தனது கல்வித் தாகத்தையும், கல்வித் தரத்தையும் கைவிடாமல் கட்டிக் காத்து வருகிறது. தற்போதைய புதிய சூழலில் வித்தியாலயத்தின் வளர்ச்சி மேலும் ஓங்கி உயரவும் இன்றைய நிகழ்வுகள் சிறக்கவும் எனது வாழ்த் துக்களை தெரிவிக்கின்றேன்.

இ.த.ஜெயசீலன்
உதவி அரச அதிபர் பணிமனை
காரைநகர்.


## பழைய மாணவரின் உள்ளத்திலிருந்து

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே".

பெற்ற தாயைப் போற்றி பிறந்த ஊரைப் பெருமைப்படுத்துவது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். அதேபோல நாம் படித்து, ஓடி விளையாடி, எம்மை நல்ல நிலையில் வைத்து எமது ஊருக்கு தொண்டு செய்யும் நிலைக்கு அறிவூட்டிய எமது பாடசாலையின் இன்றைய விழாவில் கலந்து கொள்வது மட்டற்ற மகிழ்ச்சி ஆகும். எட்டாப் புகழ் படைத்து குன்றிலிட்ட தீபம் போல கல்வி ஒளி மிளிர உறுதுணையாக இருக்கும் கல்லூரி சமூகத்திற்கு தோள்கொடுப்போம். வாழ்க மாணவ மணிகள். வளர்க உங்கள் கல்வி.

இ.சுந்தரதாஸன் (U.K)
பழைய மாணவர்.





## "நீ உனக்கு உண்மையாய் இரு"

எமது வித்தியாலயத்தின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்றைய தினம் நடை பெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

"நீ உனக்கு உண்மையாய் இரு" என்ற மகுட வாக்கியத்துடன் இயங்கும் இப்பாடசாலை பல வெற்றிப்படிகளை தாண்டி முன்னேறி வருகின்றது.

தடைக்கற்கள் அனைத்தும் உமக்கு வெற்றிப் படிகளே என்ற எண்ணத்துடன் கல்வி கற்று எமது பாடசாலைக்கும் எமது பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்த கல்விமான்களைப் போல் இன்னும் பல கல்விமான்களை உருவாக்க இந்நாளில் திட சங்கற்பம் பூணுவோம். என்பதுடன் மாணவர்களும் மன உறுதியுடன் தளராது கல்வி கற்று சாதனை படைக்க வாழ்த்துகின்றேன். இன்றைய இவ் விழாவிற்கு உறுதுணையாய் இருந்து ஒத்துழைத்த அனைத்து உள்ளங்களிற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

பொ.சிவானந்தராசா
அதிபர்
யா/ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்
காரைநகர்.

மலரமைப்பு:
வலம்புரி
செய்தியாளர்
காரைநகர்

## பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வழியில் வந்த உயர்திரு முத்து சயம்பு உபாத்தியாரால் 1988 இல் ஆரம்பிக்கப்பட்டதே தற்போது கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயமாக விளங்குகிறது. ஆங்கிலக் கல்வியுடன் சைவமும் தமிழும் வளர்க்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட இக் கல்லூரியில் இன்று ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் நடைபெறுவதனையிட்டு மகிழ்வடைகின்றேன். இப் பாட சாலை தொண்டாற்றிய பலரதும் முயற்சியினால் 1 A,B பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு யாழ் மாவட்டத்தில் புகழ் பூத்த கல்லூரியாக திகழ்கிறது.

எதிர்காலத்தில் இக்கல்லூரி தேசிய கல்லூரியாக மலர்ந்து காரை வாழ் மாணவர்களின் அறிவுப் பசியை போக்கும் அறிவாலயமாக மிளிர எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரநாதனை வணங்கி வாழ்த்துகின்றோம்.

திருமதி.விஜயகலா மகேஸ்வரன்
(வித்தியாலய பழைய மாணவி)
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ். மாவட்டம்.

## பிரதம விருந்தினரின் வாழ்த்துரை



இன்று நடைபெறுகின்ற காரைநகர் தியாகராஜா மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் என்னையும் எனது பாரியாரையும் பிரதம விருந்தினராக அழைத்த மையையிட்டு பெரு மகிழ்வடைவதோடு இதற்காக கல்லூரி சமூகத்திற்கு மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

இன்றைய நாளில் பரிசு பெற்று சாதனை படைக்கும் மாணவர்களும் ஏனைய மாணவர்களும் இக் கல்லூரி மூலம் தங்கள் வாழ்வின் எதிர்காலத்திற்கு வளமான அத்திவாரத்தினை இட்டுச் செல்ல வேண்டும்.

இம் மாணவர்களின் ஆளுமை விருத்திக்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் சிறந்த வழிகாட்டிகளாகவும் ஊக்கிகளாகவும் தொழிற்பட வேண்டும். அதே நேரம் பாடசாலையின் அபிவிருத்திக்கும் துணைக்கல்விச் செயற்பாட்டிற்கும் கல்லூரிச் சமூகம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று கூறி இவ்விழா வெற்றிகரமாக இனிதே நிறைவேற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

Dr.ஆ.சிவசோதி
(பழைய மாணவர்)
கால்நடை உற்பத்தி சுகாதாரதிணைக்களம்
பேராதனை.

## ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் 06-08-2010

இடம் : - கல்லூரி நடராஜா மண்டபம்
தலைவர் :- திரு.பொ.சிவானந்தராஜா(அதிபர்)
பிரதம விருந்தினர் :- டாக்டர் ஆ.சிவசோதி (பழையமாணவர்)
சிறப்பு விருந்தினர் :- திரு.இ.சுந்தரதாஸன் (பழையமாணவர்)
பரிசில் வழங்கல் :- திருமதி.புஸ்பதேவி சிவசோதி
ஸ்தாபகர் நினைவுப் பேருரை :- பண்டிதை செல்வி யோகசோமசுந்தரம்

அனைவரும் வருக.

கலாநிதி தியாகராஜா
மத்திய மகாவித்தியாலயம்
காரைநகர்

கஜமுகன் ஹாட் வெயர்
சகலவிதமான கட்டடப் பொருட்களையும்
பெயின்ற் வகைகளையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ளலாம்
147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P -021 222 2833

உங்கள் கால்களுக்கு ஏற்ற
காலணிகளை உங்கள்
விருப்பத்திற்கேற்ப தெரிவு
செய்ய நாடுங்கள்
சூப்ப சூஸ்
434, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P -021 222 5543

திருமுருகன்
கொம் நெற்
உள் நாடுகளுக்கு ஆகாய கடல்
மார்க்கமாக பொதிகள் சேவை
விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
259, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

ஈஸ்வரன் ரேடர்ஸ்
யாழ் குடா நாட்டிலிருந்து உள்ளூர் உற்பத்தி
விவசாய பொருட்களை குறைந்த
கட்டணத்துடன் கொழும்புக்கு கொண்டு
செல்லும் சேவை
115,69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஐ.நாவை உள்ளே விடு; சீமானை வெளியே விடு

## நாம் தமிழர் இயக்கம் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

கர்நாடகாவில் நேற்று மகாத்மா காந்தி சாலையில் நாம் தழிழர் கட்சி என்ற சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாம் தமிழர் கட்சி, பெரியார் திராவிடர் கழகம், கர்நாடக தமிழ் மக்கள் இயக்கம் , கர்நாடக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகியனவும் கலந்து கொண்டன. ஆர்ப்பாட்டத்தின் போது கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைதுசெய்யப் பட்டதை கண்டித்தும் ஐ.நாவின் ஆலோசனைக் குழுவை இலங்கைக்குள் அனுமதித்து போர்க்குற்ற விசாரணையை ஆரம்பிக்குமாறும் வலியுறுத்தி தமிழக மத்திய அரசுக்கு எதிராக கோங்கள் எழுப்பப்பட்டன. (6-2)

# மண்டபத்திலிருந்து படகுகளில் தப்பிச்செல்லும் இலங்கை அகதிகள்

## தமிழக பொலிசார் விசாரணை

மண்டபம் பகுதியில் படகுகளை திருடிக் கொண்டு அகதிகள் தப்பி, இலங்கை செல்வது தொடர்கிறது.மண்டபம், இராமேஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாகவே நாட்டு படகுகள் காணாமல் போகின்றன. மண்டபம் மற்றும் வெளி முகாமிலிருந்தும் அகதிகள் அவ்வப்போது கடல் வழியாக இலங்கைக்கு தப்பி செல்கின்றனர்.

இவ்வாறு செல்லும் அகதிகளிடம் அதிக ளவில் பணத்தை பெற்று கொள்ளும் முகவரிகள் மண்டபம், பாம்பன், இராமேஸ்வரம் கடற்கரை பகுதிகளில் நிற்கும் நாட்டுப் படகுகளை திருடி அதில் அகதிகளை ஏற்றி செல்கின்றனர்.

இந்நிலையில் மண்டபம் முகாம் ஜபருல்லா வயது (30) என்பவருக்கு சொந்தமான நாட்டுப்படகு காணாமல் போனது. இந்த படகில் அகதிகள் தப்பி சென்று இருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்தனர். இதனிடையே அதே நாட்டுபடகு இராமேஸ்வரம் பகுதியில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியது. இது தொடர்பாக பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (6-2)

# வன்முறைகளில் ஈடுபடுவதால் மட்டும்

# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது

## பேச்சுவார்த்தைக்கு வருமாறு ப.சிதம்பரம் அழைப்பு



(புதுடில்லி)

கண்மூடித்தனமாக வன்முறையில் ஈடுபடுவதால் மட்டும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது என்று உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார். மீண்டும் பேச்சு நடத்த கலகக்காரர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில வாரங்களாக கலவரம் நடந்து வருகிறது. புதிய யுத்தியாக பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது அவர்கள் கல்வீசி தாக்கி வருகின்றனர். கலகக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் காஷ்மீர் நிலவரம் குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அறிக்கை சமர்ப்பித்தார்.

காஷ்மீரில் கடந்த சில வாரங்களாக நடந்து வரும் கலவரத்தில் 39 உயிர்கள் பலியாகி இருப்பது கடும் கவலையளிப்பதாக உள்ளது என்றும் எந்தவொரு பிரச்சினையாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மீது நம்பிக்கை வைத்து தீர்வுகாண வேண்டும் என்று போராட்டக்காரர்களிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

காஷ்மீரில் அமைதி திரும்புவதற்காக மாநில அரசு அரசியல் ரீதியிலும் நிர்வாக ரீதியிலும் பல்வேறு திட்டங்களை பரிசீலித்து வருகிறது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட மாநில அரசுக்கு மத்திய அரசு அனைத்து விதமான உதவிகளையும் அளித்து வருகிறது. பேச்சுவார்த்தை மூலம் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகாண்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் வளர்ச்சி திட்டங்களை முடுக்கி விடுவதோடு காஷ்மீர் மக்களுக்கு சம உரிமையும் நீதியும் காக்கப்படும் என்று கூறினார்.

மேலும் காஷ்மீர் மக்களது பிரச்சினை தனது மக்களின் பிரச்சினை என்பதை அரசு நன்கே உணர்ந்துள்ளது. கோரிக்கைகளை வலியுறுத்துவதில் கவனம் கொள்ளுங்கள் ஆனால் வன்முறை போராட்டங்களில் இருந்து விலகி இருங்கள் என்று காஷ்மீர் மக்களை அவர் கேட்டுக்கொண்டார். அத்துடன் தான் தோன்றித்தனமான வன்முறை செயல்களும் பொதுச் சொத்துக்களை அழிப்பதும் எந்த வொரு பிரச்சினைக்கும் தீர்வாக அமைந்து விடாது. அதற்குப் பதிலாக விலைமதிப்பில்லா மனித உயிர்களை பலி கொடுக்கும் நிலை ஏற்படுகிறது.

அரசியல் ரீதியில் தீர்வுகாண எந்த முயற்சி எடுப்பதனாலும் அங்கு அமைதி திரும்பிய பிறகே செய்யப்படும்.சில பிரிவினைவாதிகள் ஆயுதங்களுடன் அப்பாவி மக்களுடன் கலந்து பாதுகாப்புப் படையினரை நோக்கி சுட்டுள்ளனர். தற்பாதுகாப்பாகப் படையினர் திருப்பிச்சுட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. போராட்டக்காரர்களைக் கலைக்கும் போது நிதானமாகவும் கட்டுப்பாட்டுடனும் செயற்படுமாறு படையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலேயே தீர்க்க முடியும் என்பதில் அரசு முழு நம்பிக்கை கொண்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு ஆதரவாக இருந்த பாசல் உல் ஹக் குரேஷி கொல்லப்பட்டதை அடுத்து பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் முடங்கிப் போயின. எனவே மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க அரசு தயாராக உள்ளது. காஷ்மீரில் அமைதி திரும்ப எல்லா நடவடிக்கைகளும் எடுப்பதாக மாநில முதல்வர் ஒமர் அப்துல்லா பிரதமர் மன்மோகனிடம் உறுதியளித்துள்ளார். வன்முறைக் கலவரத்தில் பல உயிர்கள் பலியாகியிருப்பது குறித்து மத்திய அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. குறிப்பாக இளைஞர்கள் பலர் இறந்துள்ளனர்.

உங்கள் குழந்தைகள் பாதுகாப்பை பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டும். பிரிவினைவாதிகளின் தவறான வழிகாட்டுதலில் இளைஞர்கள் பாதை மாறிச் செல்லும் ஆபத்துள்ளது என்று அவர் எச்சரித்தார்.

பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி பேசும் போது, காஷ்மீர் நிலவரம் குறித்து மக்களவையில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கோரினார். விவாதம் நடத்தினால்தான் அங்கு அமைதி நிலவ அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பது உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்றார் அவர். காஷ்மீர் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என்று மாநிலங்களிலும் உறுப்பினர்கள் வலியுறுத்தினர். (6)



கரூர் மாவட்டம், மேட்டு மகாதானபுரம் மகாலட்சுமி கோவிலில், ஆடிப் பெருக்கு திருவிழாவையொட்டி, பக்தர்கள் தலையில் தேங்காய் உடைக்கும் நேர்த்திக் கடன் நடந்தது. ஆக்ரோஷமாக பக்தர்கள் தலையில் தேங்காய் உடைக்கும் பூசாரி, தலையில் தேங்காய் உடைத்து நேர்த்திக்கடன் செலுத்திய பெண் ஒ்ருவருக்கு மண்டை உடைந்து இரத்தம் வழிந்தது.

# காஷ்மீரில் பலியானோர் எண்ணிக்கை 47 ஆக உயர்வு

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் வன்முறையில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் நேற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.இதில், ஒருவர் பலியானார்.

இதனால், கடந்த ஜூன் 11-இல் இருந்து வன்முறைச் சம்பவங்களின் எதிரொலியால் பாதுகாப்புப் படையினர் நடத்தும் துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.

குன்பத்யார் என்ற இடத்தில் நேற்று வன்முறையில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது துணை இராணுவப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் குலாம் முகமது என்ற முதியவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக பெமினா பகுதியில் நடந்த வன்முறைச் சம்பவத்தில் முகமது யாகூப் பட் என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதனால் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானோர் எண்ணிக்கை 30 ஆகவும் கடந்த ஜூன் 11 இல் இருந்து உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை 47 ஆகவும் உயர்ந்துள்ளது.ஸ்ரீநகர் மற்றும் காஷ்மீர் பள்ளதாக்கு பகுதிகளின் பெரும்பாலான இடங்களிலும் ஊரடங்கு உத்தரவு தொடர்கிறது.

இதனிடையே காஷ்மீர் வன்முறைச் சம்பவங்களை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்தில் பிரதமர் மன்மோகன் சிங் அனைத்து கட்சிக் கூட்டத்தைக் கூட்டவுள்ளார். (6-2)




# இலங்கைக்கு அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவை அனுப்ப வேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி வலியுறுத்தல்

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மாநில சுயாட்சி வழங்க வலியுறுத்தி, அனைத்து கட்சி நாடாளுமன்றக் குழு ஒன்றை அந்நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் கூறுகையில், தமிழர்களை மறுகுடியமர்த்த இலங்கை அரசை இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும். தமிழர்களுக்கு மாநில சுயாட்சி வழங்க வலியுறுத்தி, மத்திய அரசின் சார்பில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்றக் குழ ஒன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்.

விலைவாசி உயர்வை கண்டித்து வரும் 22 ஆம் திகதி முதல் 7 நாட்களுக்கு மாநிலம் தழுவிய நடை பயணத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ள இருக்கிறது.

கிராமப்புறத்தில் 30 இலட்சம் குடும்பத்தினரையும், நகர்ப் புறங்களில் 20 இலட்சம் குடும்பத்தினரையும் இந்த நடைப்பயணத்தில் சந்திப்போம். அப்போது மத்திய அரசின் தவறான கொள்கைகள் குறித்து பிரச்சாரம் செய்ய உள்ளோம். வரும் 31 ஆம் திகதி கடலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட 6 நகரங்களில் பொதுக்கூட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றார். (6-2)

படிப்புக்கள் அனைத்திலும் அதி உன்னதமான படிப்பு மனிதன் எப்படியிருக்க வேண்டும். எதைத் தேடவேண்டும் என்ற படிப்புத்தான். – பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மாணவர்களின் நடத்தை பற்றி அதீத கவனம் தேவை

எந்தவித கட்டுப்பாடுமற்ற நிலைமையை எவரும் 'சுதந்திரம்' என்று கூறுவதில்லை. கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது கூட சுதந்திரம் தான்.

எனினும் யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்படும் பக்குவம் மாணவர்களிடம் இல்லாமல் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது, வேதனை நெஞ்சை அடைக்கின்றது.

குறிப்பாக, எங்கள் மாணவர்கள் கட்டுப்பாடுகளை ஒழுக்க விதிமுறைகள் என உணர்ந்து கொள்ள மறுப்பதனால் அவற்றை உடைத்தெறிய முற்படுகின்றனர்.

இங்குதான் பிரச்சினையே ஆரம்பிக்கின்றது. இதற்கு மேலாக வக்கிர உணர்வுகள் மாணவர்களிடம் மேலோங்குவதைப் பார்க்கும்போது, எதிர்காலம் பற்றிய நினைப்புகள் அச்சம் தருபவையாகவே அமைகின்றன.

மாணவர்கள்–ஆசிரியர்கள்–பெற்றோர்கள் என்ற முக்கூட்டு உறவு பற்றி ஒருகணம் சிந்தித்தால், வேதனையைத் தவிர வேறு ஏதுவும் மிஞ்சாது.

அந்தளவுக்கு மாணவர்–ஆசிரியர்–பெற்றோர் உறவு உள்ளது. ஆசிரியர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்ற மறுக்கும் மாணவர்கள். மாணவர்களுக்குத் தண்டனை வழங்கி மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு முகம்கொடுக்கும் வில்லங்கத்தில் மாட்டிக் கொள்வதை முற்றாகத் தவிர்க்கும் ஆசிரியர்கள்.

தங்கள் பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள்? அவர்களின் கல்விச் செயற்பாடுகள் எப்படி உள்ளன? அவர்களின் நண்பர்கள், புறவயச் செயற்பாடுகள், பழக்க வழக்கங்கள் என எதனையுமே தெரிந்து கொள்ளாத பெற்றோர்கள்.

இந்த அவலத்தில், மாணவர்களை வழிப்படுத்துவது யார்? என்ற மாபெரும் கேள்வி எங்கள் முன் எழுகின்றது. எங்கள் மாணவர்களை நாங்கள் வழிப்படுத்தவில்லை எனில்–கட்டுப்படுத்தவில்லை எனில் அவர்கள் பொலிஸ் நிலையங்களில் தண்டிக்கப்படுபவர்களாக மாறுவர். இதற்குப் பல சான்றுகள் எங்களிடம் உண்டு.

எனவே கல்வி பற்றியும், கணிப்பீடு பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கும் எங்கள் கல்விச் சமூகம் மாணவர்களின் செயற்பாடுகளைக் கவனிக்கும் அதிரடி நடவடிக்கையை மேற்கொள்ளும் திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

இல்லையேல் கோஷ்டி மோதல், குழுச் சண்டை, தெருச் சண்டித்தனம், வீடு புகுந்து அட்டகாசம் புரிதல் என்ற பயங்கரங்கள் அரங்கேறுவதைத் தடுக்க முடியாது போகும்.

# இளைஞர், யுவதிகள் 70 பேருக்கு ஆடைக் கைத்தொழில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் தையல் பயிற்சி நெறியினை நிறைவு செய்த மாணவர்களுள் 70 மாணவர்களுக்குத் தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சினால் ஆடைக் கைத்தொழில் துறையில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த [illegible] மாதம் 27,28,29 ஆம் திகதி [illegible]வட்ட திட்டமிடல் செயலகத்தினால் [illegible]ழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு மா[illegible]டச் செயலக கேட்போர் கூடத்தில் 145 மாணவர்களுக்கு ஆடைத் தொழிற்சாலைத்துறை சம்பந்தமான செயலமர்வு நடத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

துறைசார் உத்தியோகத்தர்களால் மாணவர்களுக்குப் பூரண விளக்கமளிக்கப்பட்டதுடன், மாணவர்களின் பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களின் ஒத்துழைப்புடன் தெற்கில் உள்ள இரு நிறுவனங்களில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உணவு, தங்குமிட வசதிகள் அந் நிறுவனங்களாலேயே ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (ச–2)

## 'இதயத்தின் இளவேனில்' கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மறைந்த கவிஞர் முருகையனின் 'இதயத்தின் இளவேனில்' மொழிபெயர்ப்புக் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்வி நிலையத்தில் கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் சோ.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் நினைவுரையினைக் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன், வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக விரைவுரையாளர் இ.ராஜேஸ்கண்ணா ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச–3)

## பிரதி அமைச்சர் மேர்வினுக்கு எதிராக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

(காரைநகர்)

நெடுஞ்சாலைப் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை மரத்துடன் கட்டிய சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நேற்று அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது நாளாந்தக் கடமைகளில் ஈடுபடாது குறிப்பிட்ட நேரத்திற்குப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சில பிரதேச செயலகங்களில் குழுமிய சமுர்த்தி உத்தியோகத்தர்கள் குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர் மரத்துடன் கட்டப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கண்டன மகஜர்களையும் கையளித்தனர்.

இதில் பணிப் பகிஷ்கரிப்பினால் யாழ்.மாவட்டத்தில் பெரும்பாலான சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகள் முடங்கியதுடன் தேவையின் நிமிர்த்தம் அலுவலகங்களுக்குச் சென்ற பொது மக்கள் திரும்பிச் சென்றனர். (ச–246)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆடிவெள்ளி

ஆடிவெள்ளி என்பது மிகவும் சிறப்பான ஒன்று. ஏனைய மாதங்களை விட வெள்ளி எனப்படும் இந்த சுக்ர கிரகம் விடியற் காலையில் மிகவும் பிரகாசமாகக் காணப் படும். இதனை திருமணமாகாத பெண்கள் உஷக் காலமாகிய 4 மணி தொடக்கம் 6 மணிக்குள் நீராடி, பொட்டுவைத்து, கோலமிட்டு, கடவுளை வணங்கி பின் தரிசனம் செய்தால் ஒரு மண்டலமாகிய 48 நாட்களுக்குள் திருமணம் நடக்கும் என்பது நிதர்ஷனமான உண்மை. அப்படி வணங்கும் பெண்களுக்கு கண் நிறைந்த கணவனையும் அவனுக்கு முழு ஆயுளையும் மக்கட் செல்வங்களையும் சுக்கிர பகவான் அள்ளி வழங்குவார்.,

## யாழ்.கல்வி வலயத்தில் அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கோட்டக் கல்வி உத்தியோகத்தர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த கோட்டக் கல்வி உத்தியோகத்தர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறியத் தந்துள்ளார். (ச)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

134

கோயில் தொண்டு செய்துவாழ்வது பற்றி நாயன்மார்களது பாடல்களிலே நிறையக்குறிப்புண்டு. திருநாவுக்கரசர் சரீரத் தொண்டு செய்து இறைவனை வாழ்நாள் முழுவதும் வழிபட்டவர். ஆனால், மணிவாசகரோ சரீரத் தொண்டு செய்யாதவர். அதனால் தனக்கு இறையருள் கிடையாது என மனம் வருந்துகிறார். இறையருளைப் பெறுவதற்கு அடியார்கள் மேற்கொள்ளும் நடைமுறைகளை வரிசைப்படுத்தி பாடலிலே கூறுவதன் மூலம் தன்னை இறைவன் அறியட்டும் என்று எண்ணுகிறார்.

அவருடைய பாடல் ஒன்று இதனைத் தெளிவாகக் காட்டுகிறது. இறைவன் திருவடியைப் பற்றி நினைந்து வழிபடுவதற்கு எல்லோராலும் முடியாது. சில வழிபாட்டு நடைமுறைகள் மூலம் மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். எனவே, அதற்காகச் சில கோயில் தொண்டுகள் உள்ளன. அவற்றை நாள்தோறும் செய்து வந்தால் அதன் மூலம் இடைவிடாத சிந்தனையை மனதில் ஏற்படுத்திக் கொள்ளலாம். பூமாலை புனைந்து ஏத்திப்பாடுதல், புகழ்ந்துரைத்தல், திருக்கோயில் மெழுகல், கூட்டுதல் என்பவற்றைச் செய்வதன் மூலம் கோயில் வழிபாட்டில் ஈடுபாடு ஏற்படும். இறைவன் உறையும் திருக்கோயில் சூழல் தூய்மையாக இருக்க வேண்டும். அதனால் சுற்றுப்புறத்தையும் உட்புறத் தையும் துப்புரவு செய்வதை மெய்யடியார்கள் மிகுந்த விருப்போடு செய்வார்கள். தற்காலத்தில் இப்பணியை தொண்டுப் பணியாகச் செய்பவர் மிகக்குறைவு. குறிப்பாகத் திருக்கோயிலின் வெளிப்புறத்தை துப்புரவு செய்வதற்குப் பின்னிற்கின்றனர்.

திருக்கோயிலின் சுற்றுப்புறத்தைத் தூய்மை செய்வதை ஒரு தூய்மையான ஒரு தொண்டுப் பணியாகச் செய்து "உழவாரப் படையாளி" என்ற பட்டத்தை திருநாவுக்கரசர் பெற்றிருந்தார். மணிவாசகரும் தான் அத்தகைய தொண்டுப் பணியிலே ஈடுபடாமையைக்கூறியுள்ளார். பாண்டி நாட்டின் முதன் மந்திரியாக இருந்தவர் இத்தகைய பணிகளைச் செய்யும் வாய்ப்புப் பெற வழியில்லை. அறிவு நிலையில் இப்பணிகள் மிக எளிமையானவையாகக் கருதப்பட்டன. ஆனால், இறைவன் நினைப்பைத் தரவல்ல நற்பணிகளென அதை மணிவாசகர் நன்கு உணர்ந்துள்ளமையால் தான் அவற்றைச் செய்யவில்லையே என மனம் நோகிறார்.

இறைவன் உறையும் கோயிலை மணிவாசகர் "திருக்கோயில்" என்று குறிப்பிட்டுள்ளார். இறைவனைக் "கோமான்" என அழைக்கிறார். அவர் பாண்டிய மன்னனையே கோமான் என எண்ணி நீண்டகாலம் வாழ்ந்தவர். இப்போது அந்த மன்னனுக்கும் மேலான இறைவனைப் பற்றி அறிந்த பின்னர் இறைவனையே கோமான் என அழைக்கிறார். இறைபணியைச் செய்யாமல் இருந்தமையால் இறந்து விட வேண்டும் என்று விரும்புகிறார். இறைவனுடைய திருவடிகளை நினைத்தாலே உள்ளங்குழைய வேண்டும். அன்பு மீதூரப் பெற்று நெஞ்சம் உருக வேண்டும். இத்தகைய ஒரு பக்தி நிலைக்குத் தான் ஆளாகாமையால் இறப்பதற்கு விரும்புகிறார். மனிதப் பிறவியெடுத்தவர் அனைவரும் இறைவன் மீது பக்தி கொண்டு வாழவேண்டும் என்பதே அவருடைய கருத்தாகும்.

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன்
அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்
புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன் மெருகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராவே சார்வானே"

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

## விமானத்தில் தீப்பிடித்ததில் பயணிகள் காயம்

(சிகாகோ)

லண்டனில் இருந்து அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகருக்கு விமானம் ஒன்று வந்தது. அதில் 178 பயணிகளும் 12 விமான ஊழியர்களும் இருந்தனர். சிகாகோ விமான நிலையத்தில் தரை இறங்கிய போது விமானத்தில் லாண்டிங் கியரில் உராய்வு ஏற்பட்டு தீப்பிடித்தது. தீ விமானம் முழுவதும் பரவும் நிலை ஏற்பட்டது.

உடனே விமானி விமானத்தை ஓடு பாதையில் அவசரமாக நிறுத்தினார். பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் [illegible] பட்டது.

விமானத்தில் அவசர கதவுகள் திறக்கப்பட்டு பயணிகளை உடனே இறங்கும் படி கூறினார்கள். பயணிகள் பீதியில் முண்டியடித்துக் கொண்டு அவசர கதவுகள் வழியாக இறங்கினார்கள். அதில் 3 பேர் கீழே விழுந்து காயம் அடைந்தனர். இதற்குள் விமானத்தில் உள்ள தீயணைப்பு கருவிகள் மூலம் தீயை கட்டுப்படுத்தினார்கள். காயம் அடைந்த மூன்று பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (4)

# ஜப்பானில் கடும் வெயிலுக்கு 98 பேர் பலியாகியுள்ளனர்

## 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதி

(டோக்கியோ)

ஜப்பானில் இந்த ஆண்டில் கடும் வெயிலுக்கு இதுவரை 98 பேர் பலியாகியுள்ளதுடன் 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மே மாதம் முதல் ஜப்பானில் கடும் வெயில் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அங்கு வெயில் அளவு பதிவாகி வருகிறது.

இதனால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு அஞ்சுகின்றனர். குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டோர் கடும் வெயிலுக்கு அதிக அளவில் பலியாகி வருவதாகத் தெரியவந்துள்ளது.

மே மாதம் 31 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை கடும் வெயிலுக்கு 98 பேர் பலியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும் கடும் வெயில் தாக்குதலால் 21 ஆயிரத்து 32 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் 47.5 சதவீதம் என்று தெரியவந்துள்ளது.

டோக்கியோ , சைதமா , ஒசாகா , கனகவா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தான் அதிகமாக வெயிலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஜப்பான் செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது. 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால் வெயிலுக்கு பலியாவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (6-2)

## நேபாளத்தில் நிலச்சரிவு 14 பேர் பலி

(காத்மாண்டு)

நிலச்சரிவு காரணமாக நேபாளத்தில் 14 பேர் இறந்தனர். டோலக்கா மாவட்டம் சிப்ரிங்கோலா என்ற இடத்தில் நீர்மின்சாரத் திட்டம் அமைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டதால் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் பணியில் ஈடுபட்டிருந்த 9 பேர் இறந்தனர். மேலும் ஜாஜர்கோட் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் 5 பேர் அடித்துச் செல்லப்பட்டு இறந்தனர். அவர்களது உடல்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. (6-2)

# ஆப்கானிஸ்தான் போரில் தோல்வி என்பதா? பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு அமெரிக்கா கண்டனம்

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் போரில் அமெரிக்கா தோற்று வருவதாக கூறிய பாகிஸ்தானின் ஜனாதிபதி சர்தாரிக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலீபான்களுக்கு எதிரான போரில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ எனப்படும் பன்னாட்டுப் படைகள் ஈடுபட்டுள்ளன. இது குறித்து பிரான்ஸ் நாட்டு பத்திரிகைக்கு பேட்டி அளித்த பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி ஆப்கானிஸ்தான் போரில் பன்னாட்டு படைகள் தோற்று வருவதாக கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஆப்கான் மக்களின் இதயங்களை வெல்வதற்கான போரில் தோற்றுவிட்டதால் தலிபான்களுடனான போரிலும் தோல்வி ஏற்பட்டு வருகிறது. படை பலத்தை அதிகரிப்பது சிறிய பதிலடி நடவடிக்கை தான். ஆனால் ஆப்கான் மக்களின் இதயங்களை வெல்ல பொருளாதார மேம்பாட்டை கொண்டுவர வேண்டும். அவர்களின் வாழ்க்கையை மாற்றுவது மட்டுமின்றி மேம்படுத்தவும் முடியும் என்று நிரூபிக்க வேண்டும் என்று கூறினார்.

சர்தாரியின் இந்த கருத்துக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் கூறியதாவது ,

சர்தாரியின் பேட்டியை நான் படிக்கவில்லை. எந்த அடிப்படையில் இந்த முடிவுக்கு அவர் வந்தார் என்று தெரியவில்லை. அவரது கருத்தை அதிபர் ஒபாமா ஏற்றுக் கொள்வார் என்று நான் கருதவில்லை. ஆப்கானிஸ்தானில் கடந்த சில மாதங்களாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அந்நாட்டு மக்களின் இதயங்களையும் மனங்களையும் கவனத்தில் கொண்டே எடுக்கப்பட்டன. ஆப்கான் போரில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக ஒபாமாவும் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு இஸ்லாமாபாத்துக்குள் தலிபான்கள் நுழைய முயன்ற போது அவர்களின் கொடூர முகத்தை பாகிஸ்தான் மக்கள் அறிந்தார்கள். அதுபோலவே தலீபான்களின் கொடூர முகத்தை ஆப்கான் மக்களும் அறிவார்கள்.

தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் எடுத்த நடவடிக்கை அவர்களும் நாங்களும் பெருமைப்படக் கூடியதுதான். ஆனால் பாகிஸ்தான் இன்னும் செய்ய வேண்டியது அதிகம் இருக்கிறது என்று கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் பி.ஜே.குரோலியும் சர்தாரிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இது பற்றி குரோலி கூறியதாவது,

ஆப்கான் போரில் நாங்கள் இன்னும் வெற்றி பெறவில்லை. அதற்காக தோற்று வருகிறோம் என்று கூற முடியாது. வெற்றி பெறும்வரை கடினமாக போராட நாங்கள் தீர்மானித்துள்ளோம். இது தெற்கு ஆசியாவுக்கு மட்டுமான போர் அல்ல. உலகம் முழுவதற்குமான போர் என்று அவர் தெரிவித்தார். (6-2)

## உலகின் மிகப் பெரிய எண்ணெய் கசிவாக மெக்சிக்கோ எண்ணெய்க் கசிவு பதிவாகியுள்ளது

(வோஷிங்டன்)


மெக்சிகோ வளைகுடாவில் பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனத்துக்கு சொந்தமான எண்ணெய் கிணறு வெடித்து ஏற்பட்ட கசிவு தான் உலகிலேயே மிகப்பெரிய எண்ணெய்கசிவு என சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் புளோரிடாவுக்கும் மெக்சிகோவுக்கும் இடையே வளைகுடா பகுதியில் கடலில் பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனத்துக்குச் சொந்தமான கச்சா எண்ணெய் கிணறு உள்ளது. அது கடந்த ஏப்ரலில் வெடித்துத் தீப்பற்றியது. அதிலிருந்து கச்சா எண்ணெய் கடலில் கலக்கத் தொடங்கியது.

தீயை அணைக்கவே சில வாரங்கள் ஆன நிலையில் எண்ணெய் கசிவை நிறுத்த முடியாமல் பிரிட்டிஷ் பெற்றோலியம் அமெரிக்க மீட்பு படையினர் திணறினர். சில இலட்சம் பரல்கள் எண்ணெய் கடலில் கலப்பதாக அமெரிக்க அரசு பிரிட்டிஷ் பெற்றோலிய தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் கடந்த மாதம் 15 ஆம் திகதி எண்ணெய் கசிவு முற்றிலுமாக நிறுத்தப்பட்ட பின் கடலில் கலந்த எண்ணெய் அளவு பற்றி விரிவான புதிய கணக்கெடுப்பு நடந்தது. அதில் அரசு பிரிட்டிஷ் பெற்றோலிய தரப்பில் கூறப்பட்ட அளவைவிட 12 மடங்கு அதிகமாக 49 இலட்சம் பரல்கள் கச்சா எண்ணெய் கடலில் கலந்தது அதில் தெரியவந்துள்ளது. இது 20.58 கோடி கலன்கள் ஆகும்.

தொடக்கத்தில் தினமும் 62 ஆயிரம் பரல் எண்ணெய் வெளியேறியது. பின் வேகம்




குறைந்து 53 ஆயிரம் பரல்களானது. ஜூலை 15 இல் முற்றிலுமாக எண்ணெய் கசிவு அடைக்கப்பட்டது. இப்போது வெளியாகியுள்ள புள்ளிவிவரப்படி உலகின் மிகப் பெரிய எண்ணெய் கசிவாக மெக்சிகோ வளைகுடா எண்ணெய் கசிவு கருதப்படுகிறது.

இதற்கு முன் 1979 ஆம் ஆண்டில் இதே பகுதியில் இக்ஸ்டாக் ஒன் என்ற எண்ணெய் கிணறு வெடித்து கடலில் கசிவு ஏற்பட்டதுதான் உலகின் மிகப் பெரியதாக கருதப்பட்டது. 10 மாதங்கள் நீடித்த அதில் மொத்தம் 13.8 கோடி கலன்கள் எண்ணெய் கடலில் வீணானது. அதை பிரிட்டிஸ் பெற்றோலிய எண்ணெய் கிணறு கசிவு தாண்டி முதலிடம் பிடித்துள்ளது. (6-2)

## ஈரானின் 21 நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை

(வோஷிங்டன்)

ஈரானின் 21 நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்துள்ளது.


சர்வதேச விதிமுறைக்கு கட்டுப்படாமல் ஈரான் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தத் தடையை விதிப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

பெலாரஸில் இயங்கும் இரு வங்கிகள் ஜேர்மனியில் உள்ள நிதி முதலீட்டு நிறுவனங்கள் ஜப்பானில் உள்ள சுரங்கம் மற்றும் பொறியியல் நிறுவனங்கள் உள்ளிட்ட ஈரானின் 21 நிறுவனங்கள் மீது இந்த பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் நிதித்துறை தெரிவித்துள்ளதுடன் பயங்கரவாதிகளுக்கு உதவிக்கரம் நீட்டிவரும் ஈரானைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் குழுக்கள் மீதும் அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்துள்ளது.

அந்த வகையில் ஈரானின் புரட்சி படையைச் சேர்ந்த மொஹமத் ரெஸா , ஜஹேதி , ஹுசைன் முசாவை ஆகியோருக்கு எதிராக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் லெபனான், ஆப்கானிஸ்தான் , ஈராக் போன்ற நாடுகளில் செயல்படும் தலிபான் உள்ளிட்ட பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி செய்து வருகின்றனர் என்றும் இவர்களது செயலை முடக்கும் நோக்கில் பொருளாதாரத் தடை விதிக்கப்படுகிறது என்றும் அமெரிக்க நிதித்துறை கூறியுள்ளது.

ஈரானின் ஆதரவுடன் செயல்படும் நிறுவனங்கள் , தனிநபர்கள் மற்றும் குழுக்களை உலக நிதி நடவடிக்கையில் இருந்து தனிமைப்படுத்துவதன் மூலம் அவர்களது தவறான செயற்பாட்டை கட்டுப்படுத்திவிடலாம். இந்த நம்பிக்கையில் தான் பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்துள்ளது என்றும் அந்நாட்டின் நிதித்துறை குறிப்பிட்டுள்ளது. (6)



கென்யாவின் அதிபரின் அதிகாரங்களை மாற்றியமைப்பதற்கான புதிய அரசியல் அமைப்புத் தேர்தல் நடைபெற்றது. தற்போதைய அதிபர் முவாய்கிபாகி ஒதோயா நகரில் உள்ள பாடசாலையில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

# இந்திய அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை; இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் தடுமாற்றம்

(கொழும்பு)

சேவாக், ரெய்னா, லக்ஸ்மன் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்க இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 436 ஓட்டங்களை எடுத்து முன்னிலை பெற்றது.

தொடர்ந்து 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி, நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 45 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற, 2-வது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இந் நிலையில் 3-வதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3 ஆம் திகதி கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 138 ஓவர்களில் 425 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் திலான் சமரவீர ஆட்டமிழக்காமல் 137 ஓட்டங்களையும் அணித் தலைவர் குமார் சங்கக்கார 75, மஹேல ஜெயவர்த்தன 56, மத்யூஸ் 45, டில்சான் 41 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரக்ஜன் ஓஜா 4 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 3 விக்கெட்டுக்களையும் மிஷ்ரா, சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் 2 ஆம்.நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் 3 ஆம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அதிர்ச்சியளித்தது.

இதில் டெண்டுல்கர் 72 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து லக்ஷ்மன் களமிறங்க மறுமுனையில் ஆரம்பம் முதலே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய வீரேந்திர சேவாக் 90 பந்துகளில் தனது 21-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

எனினும் சேவாக் 105 பந்துகளில் (19 பவுண்டரிகள் உட்பட) 109 ஓட்டங்களைக் குவித்து ரான்டீவின் பந்து வீச்சில் வெலகெதரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இந்திய



அணி 199 ஓட்டங்களை எடுத்து 4-வது விக்கெட்டையிழந்தது.

அடுத்து 5-வது விக்கெட்டுக்காக லக்ஷ்மனுடன் இணைந்த ரெய்னா சிறப்பான ஆட்டத்தை வழங்க இந்திய அணி மீண்டது.

இதில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய, இந்திய அணி 300 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் சுரேஸ் ரெய்னா 96 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்து அசத்தினார். இந்த ஜோடி 5-வது விக்கெட்டுக்காக 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது, வி.வி.எஸ். லக்ஷ்மன் 97 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 56 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்து வீச்சில் மஹேல ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித் தலைவர் தோனி களம் இறங்க மறுமுனையில் சுரேஸ் ரெய்னா 111 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 62 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்து வீச்சில் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய மிதுன் சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார். இதில் அணித் தலைவர் தோனி 30 பந்துகளில் 15 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 350 ஓட்டங்களை எடுத்து 7-வது விக்கெட்டையிழந்தது.

இந் நிலையில் 8-வது விக்கெட்டுக்காக இணைந்த மிதுன்- மிஸ்ரா ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி இந்திய அணியை வலுவான நிலைக்குக் கொண்டு சென்றனர்.

இந்த ஜோடி 8-வது விக்கெட் இணைப்பாட்டமாக 64 ஓட்டங்களை எடுத்தபோது மிதுன் 77 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மிஸ்ராவும் 66 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 40 ஓட்டங்களை எடுத்து ரான்டீவின் பந்து வீச்சில் டில்சானிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 436 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.



இதில் இஷாந்த் சர்மா 8 ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் ரான்டீவ் 4 விக்கெட்டுக்களையும் மலிங்க 3, மெண்டிஸ் 2 விக்கெட்டுக்களையும் மத்யூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அடுத்து முதலாவது இன்னிங்ஸில் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த இலங்கை அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 39 ஓட்டங்களை எடுத்த நிலையில் 2 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இதில் பரணவிதான 16 ஓட்டங்களுடன் சேவாக்கின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடமும் திலகரட்ண டில்சான் 13 ஓட்டங்களுடனும் சேவாக்கின் பந்து வீச்சில் முரளிவிஜயிடமும் பிடிகொடுத்து ஆட்டமிழந்தனர்.

இந் நிலையில் நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 45 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் குமார் சங்கக்கார 12, சுராஜ் ரான்டீவ் ஓட்டம் எதனையும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்து வீச்சில் சேவாக் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப் போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான போட்டியில் பரு. லீக் அணி காலிறுதிக்குத் தகுதி

இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் 45 லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மட்டக்களப்பு வேவர் விளையாட்டு அரங்கில் நடைபெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை லீக் அணியை எதிர்த்து மட்டக்களப்பு லீக் அணி மோதியது. பிரேம் குமாரின் அதிரடி உதை மூலம் 6:0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை லீக் அணி வெற்றி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி 15-வது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் அணியின் முன்னிலை வீரர் றொக்கிள் நொயட் முதலாவது கோலை தனது அணிக்காக பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து சிறப்பாட்டத்தை வெளிப்படுத்திய பருத்தித்துறை லீக் அணியினர் கோல் மழை பொழிந்தனர்.

இதன் பயனாக ஆட்டத்தின் 30-வது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் அணியினருக்கு கிடைத்த பனால்டியை சரியாகப்பயன்படுத்திய பிறேம்குமார் கோலினை அடித்தார்.

அதனைத் தொடர்ந்து 20 நிமிடங்களுக்குள் பிறேம்குமார் தனது அணிக்காக தொடர்ந்து அடுத்தடுத்துக் கோல் கொடுத்து வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

போட்டி நிறைவாகும் 5 நிமிடத்திற்கு முன் பருத்தித்துறை லீக் அணியின் மற்றுமொரு முன்னிலை வீரரான ராஜா கோல் ஒன்றை அடித்து அசத்தினார்.

இவ் வெற்றியின் மூலம் பருத்தித்துறை லீக் அணி காலிறுதிப் போட்டிக்குத் தெரிவானது. எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் காலிறுதிப் போட்டியில் அநுராதபுரம் லீக் அணியுடன் பருத்தித்துறை லீக் அணி வடமராட்சியில் மோதவுள்ளது. (ச-2,24)

## சிவந்தனின் பயணம் தொடர்கிறது

(பாரிஸ்)

ஈழத் தமிழர்களுக்காக நீதிகோரி ஐ.நா. மனித உரிமைகள் சபை நோக்கி சிவந்தன் நேற்று 13-வது நாளாக மனித நேய நடைப் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றார்.

சிவந்தன் நடந்து செல்லும் பகுதிகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெய்த கடும் மழை காரணமாக நேற்றுக் காலை தாமதமாகவே அவரது நடைப் பயணம் ஆரம்பித்திருந்தது.

நேற்றுக் காலை முதல் மதியம் வரை 10 கிலோமீற்றர்கள் அவர் நடந்துள்ளார். சிவந்தனுடன் நேற்று 11 பேர் இணைந்து நடந்து சென்றனர்:

எதிர்வரும் 20 ஆம் திகதி ஐ.நா. முன்றலில் இறுதி நாள் கவனயீர்ப்பு எழுச்சி நிகழ்வை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. அனுமதி பெறப்பட்டதும் அது பற்றி அறி விக்கப்படும் என சுவிஸ், ஐரோப்பிய தமிழ் அமைப்புக்கள் அறிவித்துள்ளன. (ச-5)




டோக்கியோ சீமெந்தின் உடனடி சீமெந்துக் கலவை உற்பத்தி நிலையம் மிருசுவிலில் திறந்து வைக்கப்பட்டது. இதில் அதன் தலைவர் மற்றும் உற்பத்தி இயந்திர முகாமையாளர் பி.கோபிநாத் ஆகியோர் இணைந்து உற்பத்தி நிலையத்தினைத் திறந்து வைப்பதையும் டோக்கியோ சீமெந்தின் இணை முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெனகி கார உரையாற்றுவதையும் உற்பத்தி நிலையத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

# ஆசிரியர் இடமாற்ற மேன் முறையீட்டை...

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றம் வலயக் கல்வி அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட ஆசிரியர்கள் பட்டியலின் அடிப்படையில்தான்.

இதில் கல்வி வலயங்கள் சிறப்பாக செயற்பட்டன. எனினும் சிலதவறுகள் இருப்பது அறியப்பட்டுள்ளது. எனவே இத்தவறுகள் சீர் செய்யப்படும்.

இந்த இடம் மாற்றம் தொடர்பில் ஆசிரியர்கள் மேன் முறையீடு செய்ய முடியும். ஆனால் நேரடியாக தமது மேன் முறையீட்டை மாகாணக் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பிவைத்தால் அவை நிராகரிக்கப்படும்.

எனவே மேன் முறையீடு செய்யும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் ஊடாக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு ஆசிரியர்கள் இடமாற்ற மேன் முறையீடுகளுக்கு விண்ணப்பிக்கும் போது பின்வரும் காரணங்களை உறுதிப்படுத்தும்போதுதான் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

✸ கர்ப்பிணித் தாய்மார்களாயின் தமது கிளினிக் அட்டையின் பிரதியுடன் அது தொடர்பான மேல் முறையீட்டை சமர்பிக்க வேண்டும்.

✸ பால் ஊட்டும் தாய்மார்களாயின் தமது குழந்தையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியுடன் அது தொடர்பான முறைப்பாட்டை சமர்பிக்க வேண்டும்.

✸ வெளிமாவட்டங்கள், கஷ்ட பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றியிருப்பின் அவை தொடர்பில் விண்ணப்பத்தில் குறிப்பிடும் போது வலயக் கல்விப்பணிப்பாளர் உரிய ஆசிரியர் களின் சுயவிபரக் கோவையை ஆராய்ந்து அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

✸ நோய்கள் தொடர்பில் இடமாற்றம் மேல்முறையீடு செய்யும் போது பிணி ஆய்வு நிலைய ஆய்வு அட்டை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சில பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பிட்டு தமது இடமாற்றத்துக்கு மேல்முறையீடு செய்யும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களை சேகரித்து வலயக்கல்விப் பணிப்பாளர்கள் எதிர்வரும் 15ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பாகவோ வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இவ் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் வடக்குமாகாண கல்வித்திணைக்கள இடமாற்ற மேன் முறையீட்டு சபை பொருத்த மான தீர்மானங்களை எடுத்து வலயக்கல் விப்பணிப்பாளர்களுக்கும் உரிய ஆசிரியருக்கும் கடிதம் மூலம் அனுப்பி வைக்கும்.

தற்போது மாவட்டங்களுக்கிடையில் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் எவரும் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

வன்னி கல்வி வலயங்களுக் குட்பட்ட பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிரப்புவதற்காகவே மேற்கொள்ளப்பட்டது.

இவ் இடம்மாற்றத்தை ஏற்று மூன்று வருடங்களுக்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் எது விதபணிப் புரைகளும் இன்றி தமது கல்வி வலய பாடசாலைக்கு இடம் மாற்றம் பெறுவர்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது 16 பாடசாலைகள் மட்டுமே மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும்போது அங்குநிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் மாவட்டங்களுக்கிடையில் ஆசிரியர் இடமாற்றம் வழங்குவதற்கான மற்றுமொரு பட்டியல் தயார் நிலையில் உள்ள தாகவும் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார். (ச-5)

# ஐ.நா. குழு...

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் இந்தமாதத்திற்கான தலைமைத்துவம் ரஷ்யாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆய்வுகளை நடத்தும் பிரிவாக இருக்கக் கூடாது. அத்துடன் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்ளக் கூடாது. எந்த தோற்றத்தில் செயற்பட்டாலும் போர் குற்றங்களை குறித்து தேடும் நோக்கம் நிபுணர்கள் குழுவிற்கு இருக்கிறது.

இதன் காரணமாக சீனாவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழுவை தாம் கடுமையாக எதிர்ப்பதாக விடாலி சர்கின் குறிப்பிட்டுள்ளார். (ச-3,5)

# மேர்வினின்...

போதே மைத்திரிபால சிறிசேன இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மேற்கொண்ட நடவடிக்கைகள் போன்றசெயல்களை தான் ஒரு போதும் ஏற்றுக்கொள்வ தில்லை அப்படியான செயல்பாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல.

மேர்வின் சில்வாவின் செயல் தொடர்பாக இதுவரை முறைப்பாடுகள் எதுவும் கிடைக்க வில்லையெனதெரிவித்துள்ள அமைச்சர் அதற்கு என்ன காரணம் என தான் அறிய வில்லை எனவும் கூறியுள்ளார். (ச-5)

# அரசுடன் இணைந்த பிரபா கணேசன்...

எமது பொதுச்செய லாளர் கலாநிதி நல்லையா குருபரனின் உடன்பாட்டுடன் பிரபா கணேசன் எம்.பியை தமது கட்சியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தம் செய்துள்ளோம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர்மனோகணேசன்விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு தற்சமயம் பயணம் மேற்கொண்டுள்ள மனோ கணேசன் தமது பயணத்தை இடை நிறுத்திவிட்டு நாடு திரும்புவதற்கு முன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது.

உத்தேச உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பிலான எமது கட்சியின் ஆலோசனைகளை அரசாங்கத்தின் உயர்பீடத்திடம் வழங்குவதற்கு அலரி மாளிகைக்கு செல்லவிருப்பதாக பிரபா கணேசன் நேற்று முன்தினம் காலை தொலைபேசியில் என்னிடம் தெரிவித்தார்.

எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஜனாதிபதியையோ அல்லது வேறு எந்த ஒரு அரசியல்கட்சித் தலைவரையோ சந்திப்பதற்கு எமக்கு இருக்கின்ற உரிமை அடிப்படையில் இதற்கான ஒப்புதலை நான் அவருக்கு வழங்கியிருந்தேன்.

ஆனால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு இன்னுமொரு மலையக நாடாளுமன்ற உறுப்பினருடன் இணைந்து அரசிற்கு ஆதரவளிப்பதாக தெரிவித்து, நாடாளுமன்றத்திலே அரசாங்கத்துடன் இணைந்துகொண்டுள்ள பிரபா கணேசனின் செயற்பாடு எமது கட்சிக் கொள்கைக்கு திட்டவட்டமாக முரணானதாகும்.

இதன் மூலம் பிரபா கணேசன் எம்.பி. கட்சித்தலைவர் என்ற முறையிலே எனக்கும் எனது கட்சிக்கும் ஒட்டுமொத்த தமிழ் மக்களிற்கும் நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளார்.

கடந்த தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் செல்லமுடியாமல் போன நிலையிலும் நான் மனம் வருந்தவில்லை ஆனால் இன்று நான் நாட்டில் இல்லாத வேளையில் அரசுடன் இணைந்து கொண்டு எனது முதுகில் குத்தியதன் மூலம் என் மனதை பிரபா கணேசன் எம்.பி. மிகவும் மோசமான முறையிலே வேதனைக்கு உள்ளாக்கியுள்ளார்.

பெரும்பான்மைக்கட்சிகளுடனான முரண்பாட்டிற்கு ஒரே தீர்வு தமிழ் பேசும் கட்சிகளும், முற்போக்கு சக்திகளும் ஒன்று சேர்வதாகும் இதுவே எமது கட்சியின் கொள்கை நிலைப் பாடாகும்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் எமது கட்சிக்கு கடந்த தேர்தலுடன் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை காரணமாக வைத்துக்கொண்டு அரசுடன் இணைவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது சுயநலவாத துரோகமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# புலிகளின்...

200 அகதிகளுடனான எம் வீ சன் சீ கப்பல் பல மாதகாலமாக சர்வதேசக் கடற்பரப்பில் அவதானிக்கப் பட்டு வருகிறது.

இந்தக் கப்பலில் செல்லும் தமிழர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என்ற கருத்தை றொஹான் குணரட்னவே முதலில் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் வார மளவில் குறித்த கப்பல் கனடாவின் கடற்பரப்பை அல்லது பிரிட்டிஷ் கொலம்பிய நகரைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில கப்பலை கனடாவின் எல்லைக்குள் அனுமதிக்காமல் இடைநிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கனே டிய பாதுகாப்பு அமைச்சு அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையிலேயே மேலும் இரண்டு கப்பல்கள் தமது கனேடிய பயணத்தை ஆரம் பிக்கவிருப்பதாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது அவர்கள் தமது பயணத்தை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் எனி னும் சன் சீ கப்பலில் உள்ள அகதிகள் தொடர்பில் கனேடிய அரசாங்கம் எவ்வாறான தீர்வினை வழங்கும் என்பதை அவதானித்து அதன் அடிப்படையிலேயே அவர்கள் செல்லவுள்ள நாடு குறித்த தீர்மானத்தை மேற்கொள்வர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள இலங்கையின் கனேடிய உயர்ஸ்தானிகர் இது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லையென குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கனேடிய வெளிநாட்டு அலு வல்கள் திணைக்களமும் இது தொடர்பில் கருத்து வெளியிட மறுத்துள்ளது. (ச-5)

# வன்னி மக்...

கிழக்கிலுள்ள துறை முகங்களின் நடவடிக்கைப் பணிகளை சீன நிறுவனங்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)




யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர்

## உயர்திரு.கே.கணேஸ்

அவர்களின்

## உன்னத சேவைக்கான பாராட்டு விழா அழைப்பு



இடம் : நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம், நல்லூர்.
காலம் : 07.08.2010 சனிக்கிழமை
நேரம் : பி.ப 3.30 மணி
தலைமை : பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன்
( துணைவேந்தர் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சி ஒழுங்கு

மங்கல விளக்கேற்றல்
இறைவணக்கம்

வரவேற்புரை : திரு.இ.ஜனக்குமார் (செயலாளர், யாழ் வணிகர் கழகம்)

ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
( ஆதீன முதல்வர் - நல்லை ஆதீனம் )
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
( ஆயர், யாழ் மறை மாவட்டம் )

தலைமையுரை : பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன்
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

வாழ்த்துரை : திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
( முதல்வர், யாழ். மாநகரசபை )
திருமதி இமெல்டா சுகுமார்
( அரச அதிபர், யாழ். மாவட்டம்)
திரு.இ.ஜெயசேகரன்
( தலைவர், யாழ். வணிகர் கழகம்)
திரு.செ.ஸ்ரீனிவாசன்
( பிரதேச செயலர், தென்மராட்சி)
வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
திரு.வே.தி.செல்வரட்ணம்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
பேராசிரியர் கே.கந்தசாமி
(விஞ்ஞான பீடாதிபதி - யாழ்.பல்கலைக்கழகம்)
திருமதி பத்மினி சிவலிங்கம்
(யாழ் பிராந்திய ஆணையாளர், வடக்கு மாகாணம்)
பேராசிரியர் கா.குகபாலன்
(தலைவர், புவியியற்றுறை - யாழ் பல்கலைக்கழகம்)
திரு.சு.பரமநாதன்
(செயலாளர், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான மக்கள் குழு)
திரு.வி.கேசவன்
(தலைவர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ். மாவட்டம்)
திரு.ம.வ. கானமயில்நாதன்
(பிரதம ஆசிரியர் - உதயன் நாளிதழ்)
திரு.பொ.கேசவராஜன்
(நிர்வாக இயக்குநர் - தினக்குரல் நாளிதழ்)
திரு.ந. விஜயசுந்தரம்
(பிரதம ஆசிரியர் - வலம்புரி நாளிதழ்)

விழா நாயகனைக் கௌரவித்தல்
ஏற்புரை - விழா நாயகன்
நன்றியுரை
திரு.த.சற்குணராசா
(முன்னாள் செயலர் - யாழ் வணிகர் கழகம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

- விழா ஏற்பாட்டுக் குழுவினர் -

(இ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.